


# பூவின் சிரிப்பு

பெ.தூரன்

# பூவின் சிரிப்பு

(கட்டுரைகள்)

பெ. தூரன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59 பிராட்வே · சென்னை 1.

உரிமை பதிவு

ஐந்தாம் பதிப்பு : மே, 1964.

விலை ரூ. 1—50

சுதந்திர நிலைய வெளியீடு—14

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

# முன்னுரை

நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்; இல்லாவிட்டால் தனியாக உலாவச் செல்லவேண்டும். இந்த இரண்டு செயல்களிலும் எனக்கு அளவு கடந்த விருப்பம் உண்டு. நல்ல நூலைப் படிக்கும்போது அதை ஆக்கியோனுடன் சேர்ந்து கொண்டு அவன் தோற்றுவிக்கும் ஒரு தனி உலகத்திலே மனம் உலவுகிறது; தனியாக உலாவும்போது அது தனது சொந்தக் கற்பனை உலகத்திலே யாதொரு கட்டுப்பாடுமின்றிப் பறந்து திரிகிறது. நூலாசிரியன் தோற்றுவிக்கும் உலகமும், மனம் தானே உண்டாக்கிக்கொள்ளும் உலகமும் எனக்குப் பெரியதோர் இன்பம் பயக்கின்றன. இவ்வாறு கூறுவதால் நாம் அனைவரும் வாழ்கின்ற இந்த மண்ணுலகத்தினிடத்தே எனக்கு விருப்பம் இல்லை என்று நினைக்கக் கூடாது. அதன் காட்சிகள், பெருமைகள், சிறுமைகள், மூட நம்பிக்கைகள், முன்னேற்றங்கள் எல்லாம் என்னைக் கவருகின்றன. தனியாக உலாவும்போது இந்த உலகத்தின் உயிராக நிற்கும் இயற்கை அன்னைதானே எனக்குத் துணை? எனது கற்பனை உலகத்திற்கும் இவ்வுலகமும் அதன் போக்குமே தூண்டுகோலாக நிற்கின்றன. ஆனால் மக்கட் கூட்டத்தை விட்டு விலகி நின்று அதன் போக்கைக் கூர்ந்து கவனிப்பதைத்தான் என் மனம் பெரிதும் நாடுகின்றது. மக்கட் கூட்டம் என்கிறபோது அதில் என்னையும் சேர்த்தே எண்ணுகிறேன். நான் அதற்குப் புறம்பல்ல. அதன் சிறுமைக்கும் பெருமைக்கும் நானும் ஒரு காரணம். உலகத்தின் வாழ்க்கை விளையாட்டைப் பார்க்கிறபோது மட்டும் மனம் தனித்து நிற்கவேண்டும் என்பது எனது ஆவல்.

இத்தொகுதியிலே உள்ள கட்டுரைகளெல்லாம் மேலே கூறிய இரண்டு விருப்பங்களின் விளைவாகவே பெரும்பாலும்

பிறந்தன. நூல்களைப் படிக்கும்போது எழுந்த எண்ணங்கள், உலாவும்போது தோன்றிய உணர்ச்சிகள் இவைகளெல்லாம் இவற்றில் இடம் பெற்றிருக்கின்றன.

ஆனால் இந்த மனம் இருக்கிறதே, அது மிகப் பொல்லாதது. அதன் கோணல்களையும், குறும்புகளையும், பச்சோந்தி மாறுதல்களையும் அளவெடுக்க முடியாது. ஒரே காட்சி, ஒரே நிகழ்ச்சி அதற்கு வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறாகத் தோன்றுகிறது. அதைப்பற்றி மனத்தின் கற்பனைகளும் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறாக இருக்கின்றன.

அது என்னை மக்கட் கூட்டத்தோடு தள்ளிவிட்டு விலகி நின்று என்ன என்னவோ கற்பனை செய்ய முயல்கிறது; நானும் அதைப் புறம்பாக நிற்கச் செய்து அதன் போக்கை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் பகுத்துப் பார்க்க முயல்கிறேன். இப்படிப் போட்டியாக நடைபெறும் முயற்சிகளில் எந்தப் பக்கத்திற்கும் வெற்றி கிடைக்காது என்ற முடிவுதான் அடிக்கடி புலனாகிறது. இருந்தாலும் அந்தப் போட்டியைக் கைவிட எனக்கு மனமில்லை.

கட்டுரை என்ற சொல்லை இக்காலத்திலே ஒரு புதிய பொருளிலே வழங்குகிறோம். கட்டுரை இலக்கியமும் ஒரு வகையில் தமிழுக்குப் புதியதுதான். ஆங்கிலம் போன்ற மேல்நாட்டு மொழிகளிலே இத்துறை மிகப் பல ஆண்டுகளுக்கு முன்பே சிறப்பெய்திவிட்டது. கட்டுரையானது இலக்கியத்தின் சீரிய அங்கமாக வளர்ச்சி பெற்ற பின்னரே ஆங்கிலத்தில் சிறுகதை வளரத் தொடங்கியது என்று கூறலாம். ஆங்கிலத்தில் உள்ளது போன்ற தனி மனிதனின் உணர்ச்சிகளையும், உள்ளப் பாங்கையும் பிரதிபலிக்கும் கட்டுரைகள் தோன்றுவதற்கு முன்பே தமிழிலே சிறுகதை இலக்கியம் பிறந்து வளர்ந்திருக்கிறது. ஆங்காங்கு விதிவிலக்காகச் சில கட்டுரைகள் தோன்றி இருக்கலாம். ஆனால் சிறுகதை வளர்ந்த அளவிற்கு வளரவில்லை.

நீதியையும் அறநெறியையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த கட்டுரைகள் ஒரு வகை. அவற்றை முன்பே நாம் தமிழில் கண்டிருக்கிறோம். அதனால் கட்டுரை என்றாலேயே அறிவு கொளுத்துவதாக அமையவேண்டும் என்ற எண்ணமும் பொதுவாக ஏற்பட்டிருக்கிறது. இது போன்ற கட்டுரைகளில் ஒருவருடைய தனி மனப்பான்மை யையும், உணர்ச்சிகளையும் காண இயலாது.

கட்டுரை எழுதுவதற்கு ஏற்ற பொருள்கள் யாவை என்பது பற்றிய ஆராய்ச்சி மிகுந்த சுவையுடையதாகும். வாய்மை, அறம் போன்ற பொருள்கள் தாம் ஏற்றவையா என்றால், ஆம் என்று உடனே கூறத் தோன்றும். ஆனால், மேல்நாடுகளில் வளர்ச்சியடைந்துள்ள கட்டுரைகளை நோக்கும்போது இந்த விடை முற்றும் சரியாகுமா என்ற ஐயம் பிறக்கின்றது. எப்பொருளைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம்; ஆனால் அவ்வாறு எழுதும் கட்டுரைகள் எழுது வோருடைய சொந்த மனப்பான்மையையும், உணர்ச்சி களையும் தாங்கியிருக்க வேண்டும் என்ற முடிவும் வலிவடை கின்றது. ஏ. ஜி. கார்டினர் என்ற ஆங்கிலக் கட்டுரை ஆசிரியர் 'எனது பயணத் தோழன்' என்ற தலைப்பில் ஒரு கொசுவைப்பற்றி அழகான கட்டுரை எழுதியிருக்கிறார். ஒரு நாள் இரவு அவர் ரெயிலில் போய்க்கொண்டிருந்தாராம். அவர் இருந்த பெட்டியில் வேறு யாருமே இல்லையாம்; ஆனால் ஒரு கொசு மாத்திரம் பயணம் செய்ததாம். அதைப்பற்றி எழுந்த உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் அக்கட்டுரை யிலே தீட்டி இருக்கிறார். அதைப்போன்ற பல ஆங்கிலக் கட்டுரைகளை எடுத்துக் காட்டலாம். அற்பம் என்று கருதக் கூடிய பல பொருள்களை அடிப்படையாகக் கொண்டு அவைகள் எழுதப் பெற்றிருக்கின்றன.

எழுதுவதிலே இலக்கியச் சுவையும் கலைப் பண்பும் இருக்க வேண்டும்; அவை மிக முக்கியம். அவ்வாறிருந்தால் எப்பொருளைப்பற்றியும் கட்டுரை எழுதலாம் என்று தோன்றுகிறது.

எனது கட்டுரைகளில் மேலே குறிப்பிட்டுள்ள இலக்கணங்கள் எந்த அளவிற்கு அமைந்துள்ளன என்பதைப் படிப்பவர்களே தீர்மானம் செய்யவேண்டும். நான் முயன்றிருக்கிறேன்; நல்ல நூல்களின் மேலுள்ள ஆர்வமும், தனியே உலாவச் செல்வதிலுள்ள ஆர்வமும் அம் முயற்சிக்குத் துணை புரிந்திருக்கின்றன என்று மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காகவே இம் முன்னுரை.

ஒரு சிறு குறிப்பு : இந்த ஐந்தாம் பதிப்பிலே மூன்று புதிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன. வணக்கம்.

பெ. தூரன்.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பூவின் சிரிப்பு | ... | 7 |
| 2. | அன்பு | ... | 12 |
| 3. | பழக்கம் | ... | 16 |
| 4. | சேரி விளையாட்டு | ... | 20 |
| 5. | முன்னேற்றம் | ... | 30 |
| 6. | காலம் | ... | 35 |
| 7. | காற்றூடி | ... | 43 |
| 8. | மழைக்காலக் காட்சி | ... | 46 |
| 9. | கரிக் குருவி | ... | 51 |
| 10. | தைப் பொங்கல் | ... | 58 |
| 11. | மறந்த பருவம் | ... | 61 |
| 12. | கார்த்திகைப் பிறை | ... | 67 |
| 13. | குறட்டை | ... | 71 |
| 14. | சாவில்லை | ... | 78 |
| 15. | எங்கள் வீடு | ... | 82 |
| 16. | நந்தா ஒளி | ... | 88 |
| 17. | அன்பே வழி | ... | 93 |

சமர்ப்பணம்

த. வேலப்பனுக்கு

# பூவின் சிரிப்பு

பூ சிரிக்கிறது. ஓயாத சிரிப்பு; மாறுத புன்முறு வல், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணத்தை, நறுமணத்தை அள்ளி வீசுகின்றது. ரீங்காரமிட்டு வரும் வண்டுகளுக்குத் தேனை மோகன இளநகையோடு கொடுக்கிறது. அடடா! அதன் வாழ்வு ஓரே இன்பம். இறுதி வரையில் ஒரே களியாட்டம். அதிலும் காற்றுத் தேவன் வந்து உடலைத் தீண்டிவிட்டால் அதன் இன்ப நடனத்திற்கு முடிவே இல்லை!

அதைப் பார்க்கும்போது உள்ளத்திலே எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறது. நாமும்தானே படைப்பின் சிகரமாக இந்த மண்ணில் இருக்கிறோம்? எத்தனை கவலைகள், எத்தனை சலிப்பு, எத்தனை நோய், எத்தனை துன்பம், எத்தனை பொறுமை, பகைமை, எத்தனை பூசல்கள், சண்டைகள், பெரும் போர்!—சே, எண்ணிப் பார்த்தால் நமக்கு அவமானமாக இல்லையா? காலையில் மலர்ந்து மாலையில் சுருங்கி நிலத்தில் விழும் பூவுக்குக்கூட வாழத் தெரிகின்றது; வாழ்க்கையைத் துய்க்கத் தெரிகின்றது. நமக்கு அதன் அறிவுகூட இல்லையா? பிறகு ஏன் இப்படிக் கவலைகளால் வாடுகின்றோம்? ஏன் இப்படி ஒருவரை ஒருவர் நாசஞ் செய்துகொண்டு வாழ்க்கையைப் பேரச்சமாகச் செய்கின்றோம்? இத்தனை கவலைகள் நமக்கு மட்டும் எங்கிருந்து முளைத்தன? இத்தனை போராட்டம் எதற்காக?

மனிதா, நீ மிக உயர்ந்த அறிவைப் பெற்றிருக்கிறாய். உனக்கு அது தனிச் செல்வம். அதைக்கொண்டு

எத்தனையோ வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொண்டிருக்கிறாய். இறைவனின் ஒரு பகுதியே நீ என்பதையும் கண்டிருக்கிறாய். உன்னுள்ளே, உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களினுள்ளே, கல்லிலே, கடலிலே, பூவிலே, பொறியிலே எங்கும் ஒரே இறைவன் இருக்கிறான் என்ற மிகப் பெரிய உண்மையைக் கண்டிருக்கிறாய். பின் ஏன் உனக்குக் கவலை? ஏன் உனக்கு இந்த அழிவு எண்ணம்? சோறில்லையா? ஒருவனை ஒருவன் வெட்டாமல், குத்தாமல் இன்பங் கிடைக்காதா? சிறகு மட்டும் இருந்தால் இந்த உலகத்தில் எத்தனையோ இன்பங்களைத் துய்க்கலாமே என்று ஏங்கினானாம் ஒருவன். சிறகு பெற்ற ஈ என்ன செய்கிறது? மலத்தில் உட்காருகிறது. சீ, அதைச் சொல்லக்கூட அருவருப்பாக இருக்கிறது. சிறகு இருந்து என்ன லாபம்? அதை நன்கு பயன்படுத்த அறிவு வேண்டாவா? மனிதனுக்கு அறிவு இருக்கிறது. ஆனால் அதைக் கோணல் வழியில் அவன் செலுத்துகிறான். பரந்த நல்ல வழி கண்ணுக்கு முன்னாலே கிடந்தாலும் அது அவனுக்குத் தெரிவதில்லை.

மனிதா, உனக்குச் சோறு கிடைக்கவில்லையா? இயற்கை அன்னை சோறு போட மறுத்துவிட்டாளா? உனது அறிவை நேராகச் செலுத்தினால் ஒன்றுக்குப் பத்தாக இயற்கை அன்னை கொடுக்கிறாள். ருஷ்யாவிலே பனிப் பாலைகளிலேகூட இன்று கோதுமை விளைகிறதாம். பனியிலே வளரக்கூடிய பாசியையும் கோதுமைப் பயிரையும் ஒட்டி, அவற்றிலிருந்து ஒரு புதிய கோதுமைப் பயிரை உண்டாக்கியிருக்கிறார்களாம். அது பனிப் பகுதிகளில் வளர்ந்து பயன் தருகிறதாம். இப்படியெல்லாம் செய்யத் தெரிந்த பிறகு சோற்றுப் பஞ்சமேது? மனிதா, ஏன் இப்படி வீணாக அழிவு தேடிக்கொள்கிறாய்? எறும்பை அழிக்கவேண்டுமானால் இறைவன் அதற்கு

இறகு கொடுப்பதாகச் சொல்லுவதுண்டு. அது பறந்து தீயில் விழுந்து மடிகிறது. அதுபோல உன்னை அழிப்பதற்காகவா இறைவன் அறிவைக் கொடுத்தான்?

மனிதா, எழுந்திரு. சோம்பலை உதறித் தள். கோணல் அறிவை நேராக்கு. பூவின் வாழ்க்கை ஒரு நாள். ஆனால் அதன் வாழ்க்கையில் மறைந்துள்ள உண்மையை நீ பின்பற்றினால் நூறாண்டு இன்பமாக வாழலாம். நேராகக் கிடக்கும் பரந்த சாலையிலே நட. குறுக்கு வழியை நோக்காதே. பிறரைத் துன்புறுத்தி, வஞ்சித்து, அடிமைப்படுத்தி இன்பங்கொள்ள நினைக்காதே. அப்படி இன்பம் பெறுவது முடியாத செயல். அதனால் இன்பங் கிடைக்காது. இத்தனை நாள் வாழ்ந்தும் உனக்கு அது தெரியவில்லையா? உனது திறமையை ஈயைப்போலப் பயன்படுத்தாதே; பூவைப்போல வாழ். வானத்திலே பற; நீந்தி விளையாடு, உலகத்தை ஒரே குடும்பமாகப் பிணை. ஆனால் குண்டைப் போடாதே. ஆயிரம் கலைகள் புதிது புதிதாகச் செய். எல்லாம் இன்பத்திற்காக; அழிவுக்காக ஒன்றும் இருக்கக்கூடாது. பசுமாசுரனுக்குக் கை எப்படியோ அப்படி உனக்கு அறிவு. அவன் தன் கையைத் தன் தலை மேலேயே வைத்து அழிந்தான். அப்படி அழிந்து போகச் செய்யும் பூதமாக இந்த அறிவை மாற்றிவிடாதே. இதை அலாவுதீனுடைய லாந்தர்ப் பூதமாகச் செய்; உனது வேலைக்காரனுக்கு. எதற்காக? இன்பம் கொண்டு வர. எதற்காக? துன்பப் பேயை உலகிலிருந்து ஓட்ட. எதற்காக? அவனியை விண்ணவர் நாடாக்க. எதற்காக? பூவின் வாழ்க்கையைப் போல மனித வாழ்க்கை மலர.

# அன்பு

இந்த உலகத்தையே இமையவர் நாடாகச்செய்யக் கூடிய பேராற்றல் எல்லோரிடத்திலும் இருக்கிறது. அதுதான் அன்பு. உனக்கு இன்பம் வேண்டுமா ? அன்பு செய்; இன்பம் தானாகவே வரும். 'ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என்று இராமலிங்க அடிகள் வேண்டினார். ஏன் ? அதுவே விண்ணாட்டு இன்பந்தரும் என்று அவருக்குத் தெரியும்.

புத்தருடைய முகத்தைப் பார். ஆஹா! எவ்வளவு அன்பு கனிகின்ற, அமைதி பொலியும் முகம்; அதில் எல்லையில்லா இன்பத்தின் மலர்ச்சியாகப் புன்முறுவல் தவழ்கின்றது. அந்தத் தெய்விக வதனத்தைப் பார்ப்பதனாலேயே நமக்கும் அமைதி பிறக்கின்றது. அவருடைய அருளுபதேசக் கையைப்பார்; அதிலிருந்து சாந்திசுடர் விடுவது தெரியவில்லையா ?

அவருக்கு இந்த அமைதி எதனால் கிடைத்தது? உலக இன்பங்களையெல்லாம் விரும்புமுன் கிட்டுமாறு தந்தை ஏற்பாடு செய்திருந்தார்; ஆனால் அன்று அவருக்கு அமைதி பிறக்கவில்லை. அரசைத் துறந்து, உலக இன்பங்களை மறந்து, உயிர்களுக்கு அன்பு செய்ய வெளிக் கிளம்பினார். அன்றுதான் அந்த அமைதி கை வந்தது.

சிலுவையிலே அறையப்பட்டிருக்கும் இயேசு முனியின் வதனத்தைப் பார். அதில் என்ன கருணை, என்ன அமைதி! உலகிற்கு அன்பு செய்வதிலேயே அவர் தம் வாழ்க்கையை ஈந்தார். தம்மைத் துன்புறுத்தியவருக்கும்

அன்பு காட்டினுர். அந்த அன்பின் மலர்ச்சியாக வந்த இன்பப் பேரொளி அவர் முகத்திலே பொங்குகின்றது. அன்பு, அன்பு—இதுவே உலகத்தின் அல்லல்களை யெல்லாம் அகற்றும் மருந்து.

பாரத நாட்டிலே எத்தனையோ சான்றோர்கள் தோன்றி இதை உலகிற்குக் காட்டி யிருக்கிறார்கள். அண்மை காலத்திலே வந்து மறைந்த வடநாட்டு இராம கிருஷ்ண பரமஹம்சரும், தென்னாட்டு இராமலிங்க வள்ளலும் இதே அன்பு மந்திரத்தைத்தான் நினைவூட்டி யிருக்கிறார்கள். நமது மத்தியிலே வாழ்ந்திருந்த காந்தியடிகள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், அரசியலிலுங்கூட அன்பு நெறியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வழி காட்டியிருக்கிறார்.

உலகம் இந்த உயர்ந்த சக்தியைக் கைக் கொள்ளாமல் இன்று கலங்குகின்றது. வழி தெரியவில்லையே என்று கண்ணை மூடிக்கொண்டு தடுமாறுகின்றது. ஆகையால் நாம் உடனே ஒன்று செய்யவேண்டும். உலகத்தின் நோய்க்கு மருந்தாகிய அன்பை யாவருக்கும் வழங்க வேண்டும். நமக்குத்தான் இது எளிதான செயலாகும். இந்த மண்ணிலே அதன் மணம் பழங்காலத்திலிருந்து வீசிக்கொண்டிருக்கிறது. 'அன்பு என்பது ஒன்று உண்டு; அதன் தன்மை அமரரும் அறிதல் அரிது' என்று இந்த நாட்டிலேதான் நன்கு அறிந்திருக்கிறார்கள். 'பகைவனுக் கருள்வாய்' என்ற கானம் இங்கு முழங்குவதுபோல ஓங்கிய குரலில் வேறெங்கும் முழங்குவதில்லை. ஆதலால், நாம் அச்செயலில் உடனே ஈடுபடவேண்டும். அம்பு முதல் அணுக்குண்டு வரையில் அழிக்கும் படைகளை உண்டாக்கிய உலகம் தனக்கு ஒரு தீராத நோய் இருப்பதை இன்று அறிந்து கொண்டது. அந்நோய்க்கு மருந்து

பாரத நாட்டில் இருப்பதையும் உணர்ந்து கொண்டது. சபர்மதிச் சாதுவின் மணிமொழிகளில் மனித இனத்தைக் காப்பாற்றும் சஞ்சீவி இருப்பதைப் பேரறிஞர்கள் கண்டு கொண்டார்கள். ஆதலால், நாம் இப் பெரிய பணியை வெற்றியுடன் செய்வதற்கு, உடனே எல்லா முயற்சிகளையும் முழுமனத்தோடு செய்யவேண்டும். உலக நன்மையை முன்னிட்டும், எதிர்கால நலத்தை முன்னிட்டும் நாம் இதைச் செய்தாக வேண்டும். ஏழை என்றும் அடிமை என்றும் ஒரு தனி மனிதனோ, ஒரு சிறு நாடோ இருக்கும் வரையில் மனித சமூகத்தின் துன்பங்கள் நீங்க முடியாது. வல்லரசுகள் இதை உணர்ந்து நாடுகள் அனைத்தையும் சமமாக எண்ண முயலவேண்டும். அப்பொழுது தான், உலகனைத்தையும் ஒரு பெருங் குடும்பமாக அன்பெனும் மந்திரத்தால் பிணைக்க வேண்டிய வசதி பிறக்கும்.

நான் மறுபடியும் சொல்லுகின்றேன். அன்பொன்றே இன்று உலக நோய்க்கு மருந்து. அன்பு அசுரத் தன்மையை மாற்றிவிடும். அன்பு கோணிய அறிவை நேராக்கும். அன்பே இன்பத் தேனூற்றை எங்கும் பெருகச் செய்யும்.

அன்பே சிவம் என்று மறைகள் முழங்குகின்றன. அன்பே இறைவன். அவனுக்குச் சிறந்த வழிபாடு செய்ய வேண்டுமானால் அன்பு செய். அன்பை அவனுக்கு நிவேதனம் செய். அது ஒன்றுதான் அவனுக்கு உகந்த வழிபாடு.

இறைவன் எங்கிருக்கிறான் ? கோயிலிலா ? கல்லிலா ? கயிலாயத்திலா? கடலிலா? அவன் எங்கும் இருக்கிறான். தூணிலும் உள்ளான், துரும்பிலும் உள்ளான். வீதி

பெருக்கும் தோட்டி அவன் வடிவம். நாதியற்ற தொழு நோயன் அவன் வடிவம். அவர்களுக்கு அன்பு செய். அதுவே கடவுள் வழிபாடு.

அன்பு செய்தால் அல்லல் தீரும். அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும். அமைதி பெருகினால் அதுவே பேரின்பம்.

# பழக்கம்

நாட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது பழமொழி. பார்த்தீர்களா பழக்கத்தின் வலிமையை? இது போல ஏதாவதொரு பழமொழியையோ அல்லது திருக்குறள் மணியையோ முதலில் எழுதிக் கட்டுரை தொடங்குவது தமிழில் மரபாக நீண்ட காலம் இருந்து வந்தது. இப்பொழுது அது குறைந்து கொண்டு வந்தாலும் அந்தப் பழக்கம் என்னை மட்டும் விடாது பிடித்துக் கொண்டிருப்பதால் அப்படியே தொடங்குகின்றேன். விடாது ஒன்றைப் பழகி வந்தால் அது பிறகு நம்மை எளிதில் விட்டுவிடாது.

எனக்கு ஒரு திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரைத் தெரியும். அவர் தம் 64-ஆம் வயதிலும் பள்ளி நடத்தி வந்தார்! பிறகு அறவே பல்லென்ற உறுப்பே அற்றுவிட்டதால் அவர் சொல்லுவது யாருக்கும் ஒன்றும் விளங்காமற் போயிற்று; அதனால் அவர் ஓய்வெடுத்துக் கொள்ள நேரிட்டது. இருந்தாலும் காலையில் பிள்ளைகள் எல்லோருக்கும் முன்னால் அவர் பள்ளியில் தோற்றமளிப்பார். சில வேளைகளில் பிரம்பும் கையில் இருக்கும். நீங்கள் ஒன்றும் அடி, இரண்டாம் அடியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பள்ளிக்கு ஆசிரியர் வந்த பிறகு முதலில் வந்தவனுக்கு ஓரடி. இரண்டாவது வந்தவனுக்கு இரண்டடி. இந்தக் கணக்கில் காலம் என்கிற ஓய்காலிக்கு இடமே கிடையாது. எந்த நேரமானாலும் ஆசிரியர் வருவதற்கு முன் வந்தவர்கள் தப்பினார்கள். மற்றவர்களுக்கு அவர்கள் வந்த எண்ணிக்கைப்படி பிரப்பம்பழம் கிடைக்கும் அந்தப் பெரிய

வரால் வேலையை விட்டு நீங்கிய பிறகும் இந்தப் பழக்கத்தை விட முடியவில்லை.

இக்காலத்தில் பகடிச் சித்திரம் வரைகிறார்களே, அதில் இந்தப் பழக்கத்தின் விடாப்பிடியை விளக்கி, நகைச்சுவையோடு பல படங்கள் வருவதைப் பார்த்திருப்பீர்கள். எனக்கு ஒரு சித்திரம், நினைத்தாலும் சிரிப்புண்டாக்குவதாக மனத்தில் இருக்கிறது. ஒரு கல்லூரிப் பேராசிரியர். அவருடைய கல்லூரிப் பணி முடிந்து மாலையில் வீடு வந்ததும் தமது சிறிய பூந்தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றுவதும், செடிகளைக் கவனிப்பதும் அவரது பொழுது போக்கு. இதில் அவர் தவறவே மாட்டார். ஒரு நாள் மாலை மழை கொட்டு கொட்டென்று கொட்டிற்று. போராசிரியர், குடையைப் பிடித்துக்கொண்டு செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றத் தொடங்கிவிட்டார்!

'நான் மறக்கினும் சொல்லும் நா, நமச்சிவாயவே' என்று பாடிய தேவாரப் பெரியாரும் இந்தப் பழக்கத்தின் ஆற்றலையே வெளிப்படுத்துகிறார். கடவுளுங்கூட இந்தப் பழக்கத்தின் வலிமையில் கட்டுண்டு கிடக்கிறாராம். அவருக்கு வரையாது கொடுத்தே பழக்கமாம். அதனால் 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்ற நியதியே அவரிடம் இல்லை. தகுதியற்றவனும் அவரை யடைந்து மனமுருகி, 'அப்பா, அருள்வாய்' என்று கையை நீட்டிவிட்டால் உடனே கொடுத்து விடுவார், வானவராயிருந்தாலும் சரி; தானவரா யிருந்தாலும் சரி—'இந்தா' என்பார். பழக்கமே காரணம்!

எங்கள் வீட்டில் ஓர் எருமைக் கடா இருக்கிறது, பார்ப்பதற்கு மொழு மொழுவென்று. 'எருமைக் கடாப் போல' என்ற உவமை பிறப்பதற்கு இதுதான்காரணமோ

என்று ஐயுறும்படி பருத்து இருட்டு மேனியாக இருக்கும். ஏரில் பூட்டி ஓட்டினுல் போதும், காலைப் பரப்பிக் கொண்டு அப்படியே படுத்துவிடும். என்ன அடி அடித்தாலும் அசையாது. ஏதோ கொஞ்சம் அலுத்துப் போகும்படி ஒருநாள் அதனிடம் வேலை வாங்கியதுதான் எங்கள் குற்றம். அன்று படுத்துப் பழகியது இப்போது தொடக்கத்திலேயே படுத்துக் கொள்ளுகிறது!

இது எருமை மாட்டுக்குத்தான் பொருந்தும் என்று நினைத்துவிடாதீர்கள். எருமைமாடு முதல் இந்திய அமைச்சர் வரை எல்லா உயிரினங்களுக்கும் இதே சட்டந்தான். ஒன்றைச் செய்து பழகிவிட்டாலோ அல்லது சொல்லிப் பழகிவிட்டாலோ அதை மாற்றுவதென்பது எளிதல்ல.

சிலர் பேசும்பொழுது, 'அப்பா, இங்கே காகிதம் கீகிதம் கிடைக்குமா?' என்பார்கள்; இன்னும் சிலர், 'அப்பா, இங்கே பேப்பர் கீப்பர் கிடைக்குமா?' என்பார்கள். இந்தக் கீகிதமும், கீப்பரும் எதிர்பாராத விதமாக எந்த வேளையிலும், சொல்லுபவர்களே நாணும்படியாக நுழைந்துவிடும்.

பழக்கத்தின் இந்த ஆற்றலை நல்ல முறையில் பயன்படுத்தினுல் பெரிதும் நன்மை ஏற்படும். சிறு வயது முதற்கொண்டே அதிகாலையில் துயில் எழ ஒருவன் பழக்கப் படுத்திக்கொண்டால் அதனுல் அவன் எவ்வளவோ நேரத்தை மிச்சப்படுத்திக் கொள்வதைப் பின்னுல் அறிந்து கொள்வான். அவனிடம் 'ஐம்பதிரவில் அகலுந் துயிலினுல்' என்ற வாக்குப் பொய்த்துவிடும்.

ஒரு நல்ல பழக்கம் நமக்கு அமைய வேண்டுமானுல், அதைத் தொடக்கத்தில் சில நாட்களுக்கோ திங்களுக்கோ விடாப் பிடியாகச் சிறிதும் வழுவாது பின்பற்ற முயல

வேண்டும். நமது எண்ணம் அதில் ஊன்றியிருக்க வேண்டும். பிறகு அது நமது முயற்சியின்றியே இயல்பாக நடைமுறையில் வந்துவிடும், நல்ல பழக்கங்களை இவ்வாறு உண்டாக்கிக் கொள்வது வாழ்க்கையில் வெற்றியடைய ஒரு சிறந்த வழியாகும்.

ஆனால் ஒருநாளும் நாம் பழக்கத்தின் அடிமையாய் விடலாகாது. நல்ல பழக்கமென்றாலும் அது நமது கையாளாக இருக்கவேண்டும். காலை எழுந்ததும் சூடாகக் காபி சாப்பிடுவதை நான், நல்ல பழக்கமென்று சொல்லவில்லை. எடுத்துக் காட்டாக சட்டென்று கிடைத்ததால் எடுத்துக் கொள்கிறேன். மேலும் இது பலருக்கு உடனே விளங்கக்கூடிய எடுத்துக்காட்டு. இந்த வாடிக்கையுள்ளவர்களுக்கு ஒரு நாள் காலையில் காபி கிடைக்காவிட்டால், அன்று முழுவதும் அவர்கள் படும்பாட்டைப் பார்க்க வேண்டுமே! தலைவலி வந்துவிடும்; மூளை வேலையே செய்யாது; நாள் முழுதும் தமக்குக் கீழே பணி செய்பவர்களின் மேல் சள்ளென்று விழுவார்கள்; ஏன், அவர்கள் அருமைக் குழந்தைகளும், மனைவியுமே அன்று அவரது சிடுமூஞ்சிப் பார்வையிலிருந்து தப்ப முடியாது. இது போன்ற அடிமைத்தனம்நல்ல பழக்கத்திடத்தும் ஆகாது.

பழக்கம் மனிதனுடன் கூடப் பிறக்காவிட்டாலும் அவனுடைய முயற்சியால் உடன்பிறந்த இயல்பான தன்மைகள்போல் அமைந்து விடும். அப்படி அமைவது விரும்பத்தக்க பழக்கமாயினும் அவன் அடிமையாகாத வரையில், நன்மையாகவே முடிகின்றது.

# சேரி விளையாட்டு

மாலைப் பொழுதிலே தனியாக உலாவப் போவதில் எனக்கு எப்பொழுதுமே அடங்காத ஆவல். அந்த நேரத்திற்கும் தனிமைக்கும் உள்ளத்தைத் தட்டி எழுப்பிக் கற்பனை உலகிலே இடைஞ்சலின்றி எங்கும் திரியும்படி செய்யும் ஆற்றல் மிகுந்திருக்கிறது. அப்படிக் கற்பனை உலகில் உள்ளத்தைச் செல்லவிட்டுக் கால் சென்ற திசையிலே போய்க்கொண்டிருந்த ஓர் அந்தி வேளையிலே எதிர் பாராமல் நான் ஒரு பறைச்சேரியை அணுகினேன். அங்கே கண்ட காட்சி என் உள்ளத்தைக் கவர்ந்தது. அதுவே சேரி விளையாட்டு என்ற கவிதைக்கும் காரணமாயிற்று.

அன்று, வானவெளியிலே அழகின் பெருக்கம் ஒன்றையும் காண முடியவில்லை. உலகத்திலும் ஏதோ ஒருவகையான வறட்சிதான் மிகுந்திருந்தது. மேற்கு மலையில் சாய்ந்துகொண்டிருந்த கதிரவனும் உற்சாகத்தைத் தரவில்லை. முன்னுலிருந்த சேரியும் அப்படித்தான்.

நான் அசையாமல் நின்று என் முன்பு தோன்றிய காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கறையான் அரித்து வெயிலையும் மழையையும் தடுக்க வலியிழந்த பனை ஓலை வேய்ந்த கூரைகள்; உப்புப் பொரிந்து விழுந்து கொண்டிருக்கும் மண் சுவர்கள்; வறட்சியும் வறுமையும் தாண்டவமாடும் குடிசைகள். அங்கே ஒரு சுவரருகிலே ஒரு சிறுவனும் சிறுமியும் மணலால் சிற்றில் கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

என் உள்ளம் அவர்கள் விளையாட்டிலே ஊன்றி விட்டது. அவர்களுடைய விளையாட்டுப் பொருள்கள் அவர்களுடைய பேச்சு, அவர்களுடைய ஏழ்மை எல்லாம் என் உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்துவிட்டன. அந்தோ என்று இறங்கும்படியான அவர்கள் நிலைமைக்கு நமது சமூகமல்லவா முக்கிய காரணம் என்ற எண்ணமும் உடன் தோன்றி என்னைத் தலை குனியச் செய்தது. பல வித உணர்ச்சிகள் உள்ளத்தில் எழுந்து மோதின. கோவையில்லாத சிதறுண்ட கவிதை வரிகள் பொங்கின. 'இக் குழந்தைகள் இப்படி வறுமையிலும், அந்தகாரத்திலும் அழுந்திக் கிடக்கின்றார்களே; அந்தோ! இவர்களை இந் நிலையில் வைத்து வாளாவிருக்கும் சமூகம் மனித சமூகமாகுமா ? அந்தச் சமூகத்திற்கும் உய்வுண்டா? முன்னேற்றம் உண்டா? என்பன போன்ற கசப்பான எண்ணங்கள் மேலெழுந்தன. நெருப்பைக் கக்கும் சொற்கள் வெடித்தன. ஆனல், நாட்கள் செல்லச் செல்லக் கடுஞ்சினமும் ஆத்திரமும் மெல்லத் தணியத் தொடங்கின. தணிந்த போதிலும் அந்தச் சேரியும், விளையாட்டும் மறையாமல் இரக்கம், ஏழ்மை, அவலம் என்னும் திரையிலே எழுதிய ஓவியம்போலத் தெளிவாக என் முன்பு தோன்றிக் கொண்டிருந்தன; இன்றும் தோன்றுகின்றன.

அந்தச் சேரிக் காட்சி என் உள்ளத்திலே குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தபோதே அது கவிதையாகக் கட்டுக்கடங்காமல் வெளிப்பட்டது. காரமும், கசப்பும், நெருப்பும் கலந்த மொழிகளிலே அப்பொழுது என் உணர்ச்சிகள் உருவெடுத்தன. ஆனல் முடிவாக அச்சிலே வந்த கவிதை அதுவல்ல. பல நாட்களின் பின் ஏற்பட்ட அமைதியின் தெளிவிலே பிறந்த கவிதைதான் வெளி வந்தது. அதில் கற்பனையைவிட உள்ளதை உள்ள

வாறு காட்டும் பகுதியே மிகுதி. இதோ அந்தச் சேரிச் சிறுவனைப் பாருங்கள் ;

உப்புப் பொரிந்துதிரும்
    உவர்மண் ணிடிந்த சுவர்
பக்கத்தில் விளையாடும்
    பாலகனைப் பாரீரோ!
கந்தலொரு கௌபீனம்
    கண்டவுடல்; மற்றும் அனல்
சிந்தும் வெயில் கடுங்குளிரே
    சிறுவனுக்கு மேற்போர்வை;
சிரங்கு சொரியுங்கை;
    செம்பட்டையான தலை;
உறங்கி விழுங்கண்கள்
    உலர்ந்தசிறு கன்னங்கள்—

இப்படியாக அச்சிறுவன் வறுமையின் கோலமாக, நோயின் இருப்பிடமாகக் காட்சியளிக்கின்றான். அவனுடன் விளையாடும் சிறுமியின் நிலை இதைவிட இழிவானது.

கந்தல் அவளுடை
    கன்னிக் கதுவுமில்லை,
இந்த உலகில் வந்த
    இயல்தோற்றம் கொண்டிருந்தாள்.

இதற்கு மேலே அவளை வருணிக்க என் மனம் வருத்தத்தினால் இசையவில்லை. ஆனால் படிப்போருக்கும் கேட்போருக்கும் அவளுடைய வறுமை உருவம் நன்கு புலப்பட்டுவிடும் என்பது என் நம்பிக்கை.

இருவரும் கூடி மண் சேர்த்து, வீடுகட்டி விளையாடுகிறார்கள். விளையாடுவதற்கு நல்ல நல்ல கருவிகள், பொம்மைகள் உண்டா? வறுமையிலே பிறந்து, வறுமையிலே

வளர்ந்து, வறுமையிலே நலியும் அவர்களுக்கு விளையாடு வதற்கு என்ன நல்ல விளையாட்டுக் கருவிகள் கிடைக்கப் போகின்றன? அவர்களுடைய விளையாட்டுப் பொருள்களை நான் கண்டபடியே எழுதியிருக்கிறேன்; பாருங்கள் :

பனங்கொட்டை ஒருநான்கு
 பாதையிலே கண்டெடுத்த
கனங்கெட்ட லாடமொன்று,
 கண்ணாடித் துண்டிரண்டு,
ஓடையிலே போயெடுத்த
 உருண்டைக்கல் லிருமூன்று
ஓடொன்று கூழ்காய்ச்ச—
 ஒருகுடும்பம் செய்கின்றார்!

விளையாடுவதற்குத்தான் நல்ல நல்ல பொருள்கள் இல்லாவிட்டாலும், கற்பனையிலாவது அவர்கள் பற்பல இன்பங்களை உண்டாக்கி மகிழ்ச்சி அடைகின்றார்களா ? குழந்தையின் கற்பனைத் திறன் மிகப் பெரிதென்று சொல் கிறார்களே! ஒரு சூச்சியையும் ஒப்பற்ற மிடுக்கு வாய்ந்த குதிரையாகக் கற்பனை செய்துகொண்டு சிறுவர்கள் அதில் சவாரி செய்வார்களே; ஆதலால் அவர்கள் உளளத்தி லாவது இன்பங்களை யெல்லாம் கற்பனை செய்து மகிழ் கின்றார்களா?

பச்சை மனம் கட்டிவைத்த
 பைஞ்சோலை சூழ்மாடம்
இச்சையெலாம் ஏவு முன்னர்
 இனிதுசெய்யும் ஏந்திழைகள்
சிந்தைகவர் ஓவியங்கள்
 செயல்மிக்க சிற்பங்கள்;
கந்தங் கமழுகின்ற
 காமன்மகிழ் பள்ளியறை;

நளபாகத் தறுசுவையில்
நல்ல நல்ல உண்டிவகை;
அளகா புரியது போல்
அளவற்ற செல்வங்கள்;
காலுக்குச் சோடு; நல்ல
காசிநகர்ப் பட்டுடைகள்;
மேலுக்குப் பொன்னணிகள்
விதவிதமாய்ச் சுண்ணங்கள்—

இவற்றையெல்லாம் கற்பனை செய்தாவது அவர்கள் இன்புறுவார்களோ என்ற கேள்வி பிறக்கவே எனக்கு ஒரு நொடி நேரம் உள்ளத்திலே ஆறுதலும் மகிழ்ச்சியும் தோன்றலாயின. ஆனல் அவை மறுகணத்திலேயே சாம்பலாய்ப் போய்விட்டன. கற்பனை செய்ய வேண்டுமானலும் அவற்றைப்பற்றியெல்லாம் கேள்வியிலாவது தெரிந்திருக்க வேண்டாமா? கண்டும் கேட்டும் அறியாதவற்றை எப்படித்தான் அவர்கள் கற்பனை செய்ய முடியும்? குதிரையில் ஒருவன் சவாரி செய்வதைக் கண்டதனுல்தானே குழந்தை ஒரு குச்சியைக் குதிரையாகப் பாவித்துச் சவாரி செய்து மகிழ்கிறது? குதிரையையே படத்திலுங்கூடக் கண்டறியாத குழந்தை அதன்மேல் சவாரி செய்வதாக எப்படித்தான் கற்பனை செய்ய முடியும்? ஆதலால் இச்சேரிக் குழந்தைகள் நளபாகத்தையும் காசிப்பட்டாடையையும், அளகாபுரியையும் எவ்வாறுதான் கற்பித்து இன்பமடைய முடியும்?

இவையெல்லாம் கற்பிக்க
எவ்வா றறிந்திடுவார்?
கனவுலகிற் காண்பதற்கும்
கருத்திலவை வேணுமன்றோ?
மனக்கோட்டை கட்டுதற்கும்
வகையறியா ஏழ்மையினர்

என்று என் உள்ளம் மறுபடியும் ஏங்கலாயிற்று. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்,

இடிந்த சுவர் விழுகூரை
எறும்புவளை பழங்கஞ்சி
மடிந்தவால் பன்றியலால்
மற்றென்ன கண்டுள்ளார்?

இவ்வாறு நான் நீள நினைத்துக் கொண்டிருக்கும் போது அச்சிறு பெண் சிறுவனைக் கூவிப் பேசிய மொழிகள் என் செவியில் நுழைந்தன.

'ஓடிவா, கஞ்சிகுடி;
மண் வெட்டப் போகணுமாம்
பண்ணையார் ஏசுகிறார்'

அடடா, விளையாட்டுக் காலத்தில்கூடத் தான் ஓர் அடிமை என்ற எண்ணம் மறக்கவில்லையே! தாய் தந்தையர்களைப் பண்ணுடிகள் ஏசுவதையும் கொடுமை செய்வதையுமே கண்ட குழந்தைகள் அதே விளையாட்டுத்தான் விளையாடுகின்றன- விளையாடித் திரியும் குழந்தைப் பருவத்தில்கூட இவர்களுக்குத் தம்மை தலைமையான நிலையில் வைத்து எண்ண முடியாதா? இவர்கள் என்றும் அடிமையிலேயே உழன்று, அடிமை எண்ணத்தையே எண்ணி, நோய்க்கும் வறுமைக்கும் அறியாமைக்கும் வயிற்றுக்கும் அடிமையாகக் கிடந்து மடிய வேண்டியது தானு? இவர்களுக்கு உய்வே இல்லையா? இம்மாதிரியான அவல எண்ணங்கள் உள்ளத்திலே எழுந்து கவிதையின் முடிவாக நின்றன.

வாழ்க்கை தனிற்புகுந்து
வல்லடிமை தான்செய்து
பாழ்த்த வயிற்றினுக்கே
பசிதீர்த்து மாயுமுனர்

கள்ளமறி யாக்குழந்தை
  கற்பனையில் ஆண்டானாய்
உள்ளமதில் எண்ணியவர்
  உவகையுற லாகாதோ ?
துன்பத்தி லேதோன்றித்
  தொழும்பே வடிவானோர்க்
கின்ப விளையாட்டும்
  இல்லையோ இவ்வுலகில் ?

இந்திய சமூகத்திற்கு இதை ஒரு கேள்வியாக விட்டு விட வேண்டுமென்பதே எனது எண்ணம். சமூகத்தை இடித்துரைக்கவோ, ஏசவோ இங்கு இடமில்லை. அக்குழந்தைகளின் இழிந்த நிலை அம்மாதிரியான சிறுமைக்கும் எட்டாது தாழ்ந்திருக்கின்றது. இறைவன் உலகத்திற்கு அனுப்பியுள்ள குழந்தைகளில் இவர்கள் நம் சமூகத்திற்கு ஒரு சோதனையாக நிற்கின்றனர். அந்தச் சோதனையில் சமூகம் எவ்வாறு வெற்றி பெறுகின்றதென்பதே கேள்வி.

இப்பொழுது கவிதையை முழுமையாகச் சேர்த்துப் படித்து எண்ணிப் பார்ப்போம்;

உப்புப் பொரிந் துதிரும்
  உவர்மண் ணிடிந்த சுவர்
தப்பி நிமிர்ந் தெழுந்தால்
  தலையிடிக்கும் தாழ் கூரை

மக்கி யழிந்து வரும்
  வறுமை வளர் சிறுகுடிசைப்
பக்கத்தில் விளையாடும்
  பாலகனைப் பாரீரோ!

கந்தலொரு கௌபீனம்
  கண்டவுடல்; மற்றும் அனல்
சிந்தும் வெயில் கடுங் குளிரே
  சிறுவனுக்கு மேற் போர்வை;

சிரங்கு சொரியுங் கை;
செம்பட்டை யானதலை;
உறங்கி விழுங் கண்கள்;
உலர்ந்த சிறு கன்னங்கள்—

குந்தியவ னுட்கார்ந்து
கூவிடவே ஓடியங்கு
வந்த சிறுமி யவள்
வரிசைதனைக் கேளீரே;

கந்தல் அவன் ஆடை,
கன்னிக் கதுவு மில்லை;
இந்த உலகில் வந்த
இயல்தோற்றம் கொண்டிருந்தாள்—

அன்புடனே கூடி அவர்
அரிதாக மண் சேர்த்துச்
சின்னச் சுவர் எழுப்பிச்
சிற்றில்ல மாக்கி யதில்

பனங் கொட்டை யொருநான்கு,
பாதையிலே கண்டெடுத்த
கனங் கொட்ட லாட மொன்று,
கண்ணாடித் துண்டிரண்டு,

ஓடையிலே போயெடுத்த
உருண்டைக்கல் லிருமூன்று,
ஓடொன்று கூழ் காய்ச்ச—
ஒரு குடும்பம் செய்கின்றார்.

மண்ணிலே வீடெடுத்து,
வாழ்க்கையையே விளையாடி,
என்னென்ன இன்பங்கள்
இளங்குஞ்சு கண்டாரோ!

பச்சை மனங் கட்டிவைத்த
　　பைஞ்சோலை சூழ்மாடம்;
இச்சையெல்லாம் ஏவு முன்னர்
　　இனிது செயும் ஏந்திழைகள்;

சிந்தை கவர் ஓவியங்கள்;
　　செயல் மிக்க சிற்பங்கள்;
கந்தங் கமழுகின்ற
　　காமன் மகிழ் பள்ளியறை;

நளபாகத் தறுசுவையில்
　　நல்ல நல்ல உண்டிவகை;
அளகா புரியது போல்
　　அளவற்ற செல்வங்கள்;

காலுக்குச் சோடு; நல்ல
　　காசி நகர்ப் பட்டுடைகள்;
மேலுக்குப் பொன்னணிகள்;
　　விதவிதமாய்ச் சுண்ணங்கள்;

இவை யெல்லாம் கற்பனைசெய்
　　தின்பமிகப் பெறுவாரோ ?
இவை யனைத்தும் கற்பிக்க
　　எவ்வா றறிந்திடுவார் ?

கனவுலகிற் காண்பதற்கும்
　　கருத்திலவை வேணுமன்றோ ?
மனக் கோட்டை கட்டுதற்கும்
　　வகையறியா ஏழ்மையினர் !

இடிந்த சுவர் விழுகூரை
　　எறும்புவளை பழங் கஞ்சி
மடிந்த வால் பன்றியலால்
　　மற்றென்ன கண்டுள்ளார் ?

சிறுமியவள் அந்தச்
சிறு வீட்டின் உள்ளிருந்து
உரைத்தாள் ஒரு வார்த்தை;
"ஓடிவா, கஞ்சி குடி;

மண் வெட்டப் போகணுமாம்
பண்ணையார் ஏசுகிறார்."
இன்பமுள்ள விளையாட்டும்
இதுதானோ, வேறிலையோ?

வாழ்க்கை தனிற் புகுந்து
வல்லடிமை தான் செய்து
பாழ்த்த வயிற்றினுக்கே
பசி தீர்த்து மாயுமுனர்

கள்ளமறி யாக்குழந்தைக்
கற்பனையில் ஆண்டானாய்
உள்ளமதில் எண்ணியவர்
உவகையுற லாகாதோ?

துன்பத்திலே தோன்றித்
தொழும்பே வடிவானோர்க்
கின்ப விளையாட்டும்
இல்லையோ இவ்வுலகில்?

# முன்னேற்றம்

சென்ற நூற்றாண்டிலே மனித சமூகம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன் ஒருவர் ஒரு நூல் எழுதினார். 'மகத்தான முன்னேற்றங்கள் ஏற்பட்ட நூற்றாண்டு' என்று அந்த நூலுக்குப் பெயர். அந்த மனிதர் வெகு சிரமப்பட்டுப் போன நூற்றாண்டிலே உண்டான விஞ்ஞான வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, கலை வளர்ச்சி என்றிப்படி எல்லாவற்றையும் குறித்துப் பக்கம் பக்கமாக வரைந்து தள்ளி, அந்த முன்னேற்றத்தின் மகத்தான தன்மையை நிலைநாட்ட முயன்றிருக்கிறார்.

அவர் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமத்தைக் கண்டு பெர்னாட்ஷாவுக்கு ம ன மி ள கி ப் போய்விட்டதாம். 'ஐயோ பாவம்! அந்த மனிதன் அத்தனை துன்பப்பட்டிருக்க வேண்டிய தேவையே இல்லையே! மனித சமூகத்தின் முன்னேற்றத்தை வெகு எளிதாக ஒரே வாக்கியத்தில் கூறி நிலைநாட்டி விடலாமே' என்று அவர் அங்கலாய்த்தாராம். மனித இனத்தின் முன்னேற்றத்தைப் பற்றி அவர் சுருக்கமாகக் கூறுவதாவது: ''காட்டுமிராண்டியாகத் திரிந்த பழங்கால மனிதன் பிறரைக் கொல்ல நச்சுத்தோய்ந்த அம்பை ஏவினான்; நாம் இன்று நச்சு வாயுவை ஏவுகிறோம்; இதுதான் நமது முன்னேற்றம்'' என்கிறார் அவர்.

கொஞ்சம் எண்ணிப் பார்க்கப் போனால் பெர்னாட்ஷா சொல்லுவது ஒரு வகையில் உண்மையாகத்தான் இருக்கிறது. பழங்கால மனிதனைவிட நாம் எந்த

வகையில் உயர்வு? அவன் கண்டறியாத மின்சார விந்தையும், ஆகாய விமானமும், அணுக்குண்டுகளும் நமக்கு நமது அறிவின் வல்லமையினுலே கிடைத்திருக்கின்றன. ஆனுல் அவையா முன்னேற்றத்திற்கு அடையாளம்? இன்று மனிதனுக்குப் பலவிதமான வசதிகள் உண்டாகி யிருப்பது மெய்தான். ஆனுல் அவையெல்லாம் இருந்து என்ன பயன்? இயற்கையின் சக்திகள் பலவற்றை மனிதன் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்திருப்பதும் மெய்தான். ஆனுல் அவற்றைக்கொண்டு அவன் தன்னைத்தானே அழித்துக் கொள்வான் போலல்லவா தோன்றுகிறது? பாரதியார் கூறுகிருர், 'இயந்திர பீரங்கிகளும் சப்மரீன்களும் நாகரிகத்திற்கு அடையாளமல்ல. நிலக்கரிச் சுரங்கங்களும், ஆகாச வெடிகுண்டுகளும் அபிவிருத்திக்கு லக்ஷணமல்ல. அவை மனுஷ்யனுக்குப் பலமல்ல, துணையல்ல. அவை மனிதனுக்குப் பகை. மனுஷ்யனையும் அவனுடைய நாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையன'' என்று.

விஞ்ஞானம் இன்று அற்புதமாக வளர்ந்திருக்கின்றது. உலகத்தை இன்பவீடாகச் செய்யக்கூடிய சக்திகள், வசதிகள் மனிதன் கையில் அகப்பட்டிருக்கின்றன. ஆனுல் அவை இருந்து என்ன பயன்? மனிதனுடைய உள்ளம் பண்பட்டு வளரவில்லையே! அது இன்னமும் விலங்கு நிலையிலே இருக்கின்றதே.

மனிதன் இன்று பஸ்மாசுரனைப்போல இருக்கின்ருன். பஸ்மாசுரன் தன் தவத்தின் பலத்தால் மிகப் பெரிய வரத்தைப் பெற்ருன். ஆனுல் அறிவில்லாமல் தன் தலையிலேயே கையை வைத்துச் சாம்பராய்ப் போனுன். அவனைப்போலவே இன்று மனிதன் விஞ்ஞான வரத்தைப் பெற்றிருக்கிருன். அவன் அந்த விஞ்ஞானத்தால் அழிந்துபோகும் காலம் வராமல் இருக்கவேண்டு

மாறுல் அவனுடைய குரங்குத் தன்மை மாறவேண்டும். உள்ளம் பண்பட வேண்டும், அப்பொழுதுதான் மனித சமூகத்திற்கு உய்வுண்டு; அப்பொழுதுதான் மனித சமூகம் தனது முன்னேற்றத்தைப் பற்றிப் பெருமை கொள்ள முடியும்.

மனிதன் தன்னுடைய நாகரிகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அறிகுறியாக வெடிகுண்டுகளையும், டாங்கிகளையும், நீர் மூழ்கிக்கப்பல்களையும் கருதும் வரையில் அவனுக்கு உய்வில்லை. உண்மையில் இன்று அவைகளையெல்லாம் செய்து வைத்துக் கொண்டிருக்கும் மக்களே ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக் கொண்டு மண்டையை உடைத்துக் கொள்ளுகிருர்கள். ஒருவரை ஒருவர் விரைவிலே அழிப்பதற்குப் போட்டி போட்டுக் கொண்டு வழிகளும் ஆயுதங்களும் கண்டு பிடிக்கிருர்கள். பாமரர்களாகக் கருதப்படும் மக்கள் சமாதானமாக வாழ்கிருர்கள். அப்படி இருக்கும்போது எதை நாகரிகம், முன்னேற்றம் என்று சொல்லுவது?

இன்று மனிதன் டாங்கிகளையும், பீரங்கிகளையும், அணிவகுத்து நிறுத்திப் பெருமைப்படுகிருன். சொந்த இனத்தையே அழித்தொழிக்க எனக்கல்லவா இத்தனை இயந்திரங்கள் இருக்கின்றன என்று இறுமாப்படைகின்ருன். ஆனுல் எப்பொழுது அவன் இவற்றையெல்லாம் பார்த்துத் தனது அரக்கத் தன்மைக்காக நாணமடைகின்ருனே அப்பொழுதுதான் அவன் நாகரிகம் அடைந்தவனுவான்.

உலகமே ஒரு குடும்பம்; அதில் வாழும் அனைவரும் உடன்பிறந்தோர்; அவர்கள் எல்லோரும் ஒருவர் போல் இன்புற்றிருக்கவேண்டும் என்ற எண்ணத்தின் வளர்ச்சியே மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு

அளவுகோல். அதற்கு மாருனதெல்லாம் மனித சமூகத்தின் கீழ்நிலையையே காட்டுவதாகும்.

இந்த உண்மையைப் பல சான்றோர்களும் அறிவாளிகளும் எடுத்துப் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மனிதன் அதைக் காதில் வாங்கிக் கொள்வதில்லை. அவன் எப்படியாவது மற்றவர்களை விட மிகுதியாக இன்பமடைய வேண்டுமென்று பிறரை வஞ்சிக்க வழி கண்டுபிடிக்கிறான். பிறரை வஞ்சிப்பதாலும் அழிப்பதாலுந்தான் தன் இன்பத்தைப் பெருக்கிக்கொள்ள முடியுமென்று தவருக எண்ணுகிறான்.

ஒருவன் மற்றவர்களைக் கொல்ல ஓர் அழிபடை செய்தால் அதற்கு ஈடுசொல்ல மற்றோர் படையை வேறொருவன் செய்வான் என்பதை மனிதன் எண்ணிப் பார்ப்பதில்லை. பறக்கும் குண்டை உண்டாக்கியவன் தன்னைப்போல வலிமை படைத்தவன் இல்லை என்று மார் தட்டுகிறான்; உலகத்தைத் தன் காலில் மிதித்து நசுக்கி விடலாம் என்று கனவு காண்கிறான். பிறகு அணுக் குண்டைத் தூக்கிக் கொண்டு வேறொருவன் தனக்கு நிகர் யாருமில்லை என்று கிளம்புகிறான்.

இந்தப் போட்டியில் மனிதன், தான் மனிதன் என்பதையே மறந்து விலங்காய் விடுகிறான். இது இப்படியே போய்க்கொண்டிருந்தால் மனித இனத்தின் அழிவு மிக விரைவில் ஏற்பட்டுவிடும்.

மக்கட் கூட்டம் இன்பத்தோடு இந்த உலகத்திலே நிலை பெற்று வாழவேண்டுமானுல் அதன் குறுகிய தன்னல மனப் பான்மையையும், பேராசையையும், தற்பெருமையையும் இன்றே உதறித் தள்ளிவிடவேண்டும்; முன்னேற்றத்தின் சின்னமாக இன்று விளங்கும் குண்டுகளையும் ஆழமான கடலிலே கொட்டி விட வேண்டும்.

உள்ளத்தின் உயரிய பண்புகளாகிய அன்பு, இரக்கம் உடன் பிறப்புணர்ச்சி முதலிய அருங்குணங்களைப் போற்றி ஓங்கச் செய்ய வேண்டும். உலகத்தின் ஒரு கோடியிலே உள்ள ஒரு மனிதன் சோறில்லாமல் வாடுகிறான் என்றால், 'அவனுக்கு உணவளித்துப் பசியாற்றும் வரையில் நான் அன்னத்தைக் கையில் தொடமாட்டேன்' என்று நினைக்கும் உள்ளப்பான்மை எங்கும் காணப்பட வேண்டும். அப்பொழுதுதான் மனித இனம் முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படும்.

பெரியோர்கள் இதைத்தான் வறுபுறுத்திக் கூறியிருக்கிறார்கள் காந்தியடிகள் போன்ற மாகன்கள் இதையே தான் முழங்கினார்கள். மனிதன் தன் அறியாமையினால் அவர்களுடைய சொல்லுக்குச் செவிசாய்க்க மறுக்கிறான். அவர்களையெல்லாம் பிற்போக்காளர்கள் என்று பேசவும் துணிகிறான்.

ஆனால் இதுவரை உலகத்தையே நடுநடுங்கும்படி செய்துகொண்டிருந்த கொடிய போர் மனிதனுடைய தவறான போக்கை நன்கு மெய்ப்பித்து விட்டது. இன்று கிடைத்திருக்கும் கொடிய படைகள், குண்டுகள் மனித இனத்தின் ஆயுளைச் சோதனை செய்வதற்காகவே தோன்றியிருக்கின்றன. அவற்றை நமது முன்னேற்றத்தின் சின்னமாகக் கருதுவோமா அல்லது அவற்றை நமது இனத்தை அழிக்க வந்த யமனாகக் கருதி ஒழிப்போமா என்பதைப் பொறுத்தே நம் எதிர்காலம் இருக்கிறது.

# காலம்

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து' என்று மிக எளிதாக எழுதத் தொடங்கி விடுகிறோம்; பேசவும் செய்கிறோம். ஆனால் அந்தக் காலம் என்ன என்பதை அவ்வளவு எளிதில் சொல்ல முடியுமா ? அக் காலத்தை மனத்தினாலேதான் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? காலத்தின் ஆதி எது, அது எப்பொழுது தொடங்கிற்று, எப்பொழுது முடியப்போகிறது என்று யாராவது வரையறுத்து உரைக்க முடியுமா?

உயிரினங்களெல்லாம் காலத்திற்குட்பட்டவை என்கிறோம். அது விளங்குகிறது. குறிப்பிட்ட காலத்தில் தோன்றிக் குறிப்பிட்ட காலத்தில் முடிவதை நாம் அறிந்திருக்கிறோம். இறைவனைக் காலங்கடந்தவன் என்று கூறிக் கொள்கிறோம். இறைவனென்றால் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று நமது அறிவு கூறுகின்றது; நம் கடவுளாவது காலத்தை வென்றதாக இருக்கட்டும் என்று உள்ளம் ஆசைப்படுகிறது. ஆனால் காலத்தைக் கடந்து ஒரு பொருள் எப்படியிருக்க முடியும் என்று நினைக்கும்பொழுதுதான் மூளை கலங்குகிறது.

காலம் என்பது ஒரு பெரிய கடல்; அதில் எழும் அலையே ஒரு நாள்; அந்த அலை, காலக் கடலிலேயே எழுந்து மேல் தோன்றி அக் கடலிலேயே மறைந்துவிடுகிறது என்று வருணிக்கிறோம். கேட்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்தக் கடலின் கரைகள் எங்கே? எங்கே தொடக்கம், எங்கே முடிவு

என்று யாராவது வினா எழுப்பினால்தான் வாய் ஊமையாய் விடுகிறது.

இப்படி ஆதியும் அந்தமும் தெரியாத காலத்தை நாம் சிறு சிறு துண்டுகளாகப் பிரித்துக் கணக்கிட்டுப் பார்க்க முயல்கிறோம். சூரியன் தோன்றி மறைந்து, மறுபடியும் தோன்றும் எல்லையை ஒரு நாள் என்று, நம் நாட்டிலே வகுத்திருக்கிறார்கள். அந்த நாளை அறுபது நாழிகைகளாகவும், இன்னும் சிறு பகுதிகளாகவும் பிரித்திருக்கிறார்கள்.

மனிதன் வேடனாகக் காடுகளிலும் மலைகளிலும் திரிவதை விட்டு உழவனாக மாறிய பருவத்தில்தான் இவ்வாறு நாளையும், பிறகு திங்களையும், ஆண்டையும் கணக்கிடத் தொடங்கியிருக்க வேண்டும். அது வரையில் அவனுக்கு இது பற்றிக் கவலையே இருந்திராது. உழுது பயிரிட முனைந்த போதுதான் பருவங்கள் மாறி மாறி ஒரு குறிப்பிட்ட நியதிப்படி வந்துகொண்டிருப்பதைக் கவனித்திருப்பான். கிறிஸ்து பிறப்பதற்கு 2269 ஆண்டுகளுக்கு முன்பே ஹீ, ஹோ என்ற பெயருடைய சீனா நாட்டு வானவியல் அறிஞர் இருவர் காலத்தை அளந்து ஆண்டைக் கணக்கிட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். வேத காலத்திலேயே இந்தியாவில் ஆண்டு 360 நாள் கொண்டதென்றும் பன்னிரண்டு திங்கள் கொண்டதென்றும் வகுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் ஆண்டைப் பற்றிய இந்தக் கணக்கில் எப்படியோ ஐந்து நாட்கள் குறைவு படுகின்றன என்பதை அக்காலத்திலேயே உணர்ந்திருந்தார்கள். ஓர் ஆண்டில் 365 நாட்கள் வேண்டும் என்று தெரிய வந்தது. அதனால் 30 நாட்கள் கொண்ட சமமான திங்கள் போய் 30, 31 என்றிம்மாதிரி நாட்களையுடைய திங்கள்கள்

நம் நாட்டில் ஏற்பட்டன். எகிப்தியர்கள் இந்த ஐந்து நாட்களை எந்த மாதத்திலும் சேர்க்காமல் தனி நாட்களாகக் கூட்டிக் கொண்டார்கள். அதற்குக் காரணமாக ஓர் அழகான கதையுங் கட்டிவிட்டார்கள். ஒரு சமயம் கடவுளுக்கு வான தேவதையின் மேல் கோபம் வந்து, 'நீ ஆண்டில் எந்த நாளிலும் பிள்ளை பெறுமல் போகக் கடவாய்' என்று சபித்துவிட்டாராம். அறிவுத் தேவனுகிய 'தோத்' திற்கும் வானதேவதைக்கும் காதல். அதனுல் அறிவுத் தேவன் இந்தச் சாபத்திலிருந்து தப்ப ஒரு வழி கண்டுபிடித்தார். சந்திரனிடமிருந்து அவன் ஒளியில் கொஞ்சம் இரவல் வாங்கி அதிலிருந்து ஐந்து நாட்கள் செய்தார். இந்த நாட்கள் எந்த மாதத்திலும் சேராமல் தனியாக ஆண்டோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் இவற்றில் வான தேவதை கருவுயிர்க்கலாம் என்ருகிவிட்டது. இவ்வாறு அந்த நாட்டிலே ஆண்டுக்கு 365 நாட்கள் ஏற்பட்டன.

இந்தக் கணக்கும் சரியல்லவென்று நாளடைவில் புலனுயிற்று. அதனுல் ரோமானியப் பேரரசராயிருந்த ஜூலியஸ் சீசர் என்பார் ஆண்டின் நாட் கணக்கை வேறு விதமாக மாற்றி அமைத்து, ஒரு மாதத்திற்கு ஜூலை என்று தம் பெயரையும் கொடுத்துக் கொண்டார். இந்தப் புதுக் கணக்கில்தான் லீப் ஆண்டு வருகிறது. ஆனுல் இந்த லீப் ஆண்டுக் கணக்கு முதலில் சரியாகப் பின்பற்றப்படவில்லை. இதிலும் தவறுகள் காணப்பட்டன. பின்பு 13 ஆம் கிரகொரி என்ற போப் பெரியார், இன்று உலகில் வழக்கத்திலிருக்கும் ஆண்டுக் கணக்கைப் பல அறிஞர்களின் உதவிகொண்டு வகுத்தார். தற்கால விஞ்ஞானிகள் ஒரு ஆண்டில் 365 நாள் 5 மணி 48 நிமிஷம் 46-15 விஞடி இருக்க வேண்டுமென்று சொல்கிருர்கள். அதன்படி பார்த்தால் இன்று வழங்கும் கணக்கில் 10,000

ஆண்டுகளில் 14 மணி 24 நிமிஷம் வேறுபாடு ஏற்படுகிறது.

ஆதலின், இன்று பின்பற்றப்படும் ஆண்டுக் கணக்கே எல்லாவற்றையும் சிறந்ததாக இருந்தாலும், எல்லா நாடுகளும் இதை உடனே ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கிலாந்து சுமார் 150 ஆண்டுகளுக்குப் பிறகே இதை ஏற்றுக் கொண்டது. அப்படிக் காலந் தாழ்த்து ஏற்றுக் கொள்கிறபோதும் ஒரு பெரிய அமளி ஏற்பட்டுவிட்டது. இங்கிலாந்தின் பழைய கணக்கின்படி அது உலகத்திற்கு பதினொரு நாட்கள் பிந்தியிருந்தது! அதனால் இந்தப் புதுக் கணக்கின்படி 1752 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதிக்குப் பிறகு உடனே 14 ஆம் தேதி வரும்படியாக மற்ற நாட்களைத் தள்ளிவிடவேண்டுமென்று பாராளு மன்றத்திலே தீர்மானிக்கப்பட்டது. உடனே பொது மக்கள் ஆர்ப்பரித்துக் கிளம்பி விட்டார்கள். அவர்கள் வாழ்க்கையில் பதினொரு நாட்கள் போய் விடுவதா? இதற்கு யார்தான் இணங்க முடியும்? இந்தத் தீர்மானம் கொண்டுவந்த செஸ்டர்பீல்டு என்பவர் வீதியில் வந்தபோது, அவர் மேல் கல்மாரி பொழியத் தொடங்கிவிட்டது. மக்களுக்குப் பதினொரு நாள் போனதோடு, செஸ்டர்பீல்டின் வாழ்நாளே போய் விடுமோ என்றாகிவிட்டது!

இப்படியெல்லாம் ஆண்டுக் கணக்கை உறுதி செய்ததோடு நில்லாமல், இந்த உலகம் தோன்றி எத்தனை ஆண்டுகளாகியிருக்கும் என்றும் கணக்கிட்டுப் பார்க்கத் தொடங்குகிறோம். இந்த உலகம் தொடக்கத்தில் சூரியனிடமிருந்து பிரிந்து வந்த ஒரு நெருப்புப் பந்தாக இருந்ததென்றும், வர வரக் குளிர்ந்துகொண்டே வந்து உயிர்

வாழ்வதற்குத் தகுதியுள்ளதாக ஆயிற்றென்றும், இன்னும் இது குளிர்ந்து கொண்டே போகிறதென்றும், இன்று இவ்வுலகத்திற்கே ஒளியும் வெப்பமும் கொடுக்கிற அந்தச் சூரியனே இன்னும் பல கோடி ஆண்டுகளில் குளிர்ந்து போகுமென்றும் பேசிப் பெருமையடித்துக் கொள்ளுகிறோம். உயிரினங்களின் இறுதியில் வந்தவன் மனிதன்; ஆனால் அவன்தான் முதலில் தன் மூளையைப் பயன்படுத்தினான் என்று தற்பெருமை கொள்கிறோம். ஆனால், "அதெல்லாம் சரி; இந்தக் காலம் எப்பொழுது தொடங்கிற்று ? எப்பொழுது முடியும்?" என்று கேட்கும்போதுதான் தலை குனிந்து போய்விடுகிறது. விடை வருவதில்லை.

பிறகு வேறு வகையில் உவமை, உருவகம் முதலிய அணிகளைக் கொண்டு பேசி, நமது அறியாமையை மறைக்க முயல்கிறோம்.

நமக்கு ஓர் ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாள். நமக்கு நானூற்று முப்பத்திரண்டு கோடி ஆண்டு பிரமனுக்கு ஒருநாள். இப்படி நீண்ட ஆயுள் கொண்ட பல பிரம் மாக்கள் அண்டங்களைப் படைக்கத் தோன்றி மறைந் திருக்கிறார்கள்—என்றால் காலத்தின் ஆதியைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று விரிவுரை நடத்துகிறோம். ஓர் ஆங்கி அறிவாளி எழுதினார்: "வடக்கே வெகு தொலை விலே ஒரு மலை நிற்கிறது. அதன் உயரம் நூறு மைல், நீளம் நூறு மைல்; அகலமும் அப்படியே. அந்த மலைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு சிறு பறவை வந்து தனது அலகைத் தீட்டிக் கொள்கிறது. அப்படிச் செய்வதால் என்று அந்த மலை தேய்ந்து மறையுமோ அன்று கற்பகாலத்தில் ஒரு நாள் கழிகின்றது" என்று. படிக்க இன்பமாய்த்தான் இருக்கிறது. காலத்தைப் பற்றிய வினாவுக்குத்தான் விடையைக் காணோம்.

கணித அறிஞர்கள் சொல்லுகிறார்கள்: "இந்த உலக மானது நீளம், அகலம், உயரம் என்ற மூன்று அளவுகளை மட்டும் கொண்டதன்று; காலம் என்ற நான்காவது அளவையுங் கொண்டது" என்று. காலவேகத்திற்குத் தக்கவாறு அளவையும் மாறுபடுகின்றது என்பது அவர்கள் கொள்கை. இந்த விதமாக ஒருவருக்கும் புரியாத வகையில் பேசிக் கொண்டிருக்கும் ஐன்ஸ்டைன் என்பாரை ஒரு சமயம் யாரோ இதைக் கொஞ்சம் விளங்கும் படியாகச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டாராம். உடனே அவர், "நீர் உமது காதலியின் வரவு நோக்கிக் காத்திருக்கிறீர் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது உமக்கு ஒரு நொடிப் பொழுது கழிவது ஒரு மணிபோலக் காண்கிறது. பிறகு காதலி வந்து விடுகிறாள். அப்பொழுது ஒரு மணி ஒரு நொடிப்பொழுதுபோல் கழிந்து விடுகிறது. இதுதான் நான் சொல்லும் கால தத்துவம்" என்றாராம்.

உலகம் காலமென்ற நான்காவது பரிமாணத்தையும் கொண்டிருந்தால் மற்றப் பரிமாணங்களாகிய நீளத்திலும், அகலத்திலும், உயரத்திலும் செல்ல முடிவது போல அதிலும் விருப்பம் போலச் செல்ல முடியுமா என்ற வினா எழுகின்றது. எடுத்துக்காட்டாக இந்தப் பேரழிவு செய்த உலகப்போர் தொடங்குவதற்கு முன்னால் அழகாக இருந்த ஐரோப்பாவுக்கு இப்பொழுது போக முடியுமா? இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இருக்கப் போகும் உலகத்தை இன்றே பார்த்துவிட முடியுமா? இந்த வினாக்களுக்கும் விடை கிடைக்கிறதில்லை. எச். ஜி. வெல்ஸ் என்ற பெரியார் கால யந்திரம் என்று ஒரு கதை எழுதியிருக்கிறார். அதில் வேண்டுமானால் ஒரு விஞ்ஞான அறிஞர் இறந்த காலத்திலும், எதிர் காலத்

திலும், செல்லும்படியான இயந்திரமொன்றைக் கண்டு பிடித்ததாக வந்திருக்கின்றது.

காலத்தில் முன்னும் பின்னும் செல்ல முடியாவிட்டாலும் போகிறது; காலத்தின் ஆதியந்தத்தை அறிய ஒண்ணுதென்றாலும் தொலைகிறது. இந்தக் காலம் நம்மை ஒரு விதத்திலும் தாக்காமல் இருக்குமானால் அதுவே போதும்; ஆனால் அது நம்மைப் படுத்துகிற தொல்லையை நினைத்தால்தான் சங்கடமாய் இருக்கிறது. முகத்தில் சுருக்குவிழச் செய்கிறது; தலையை வெளுக்கச் செய்கிறது; முதுகைக் கோணலாகச் செய்கிறது. அடடா! அது செய்யும் கோலம் ஒன்று இரண்டா? உலகத்தில் அது செய்த கொடுமைகளை நினைத்தால் இன்னும் பேரச்சமாக இருக்கிறது. ''காலமே, நீ எத்தனை நாகரிகங்களை விழுங்கி ஏப்பமிட்டிருக்கிறாய்! மொஹெஞ்சோதாரோ எங்கே? பிரமிட் கோபுரங்களைக் கட்டிய எகிப்து எங்கே? உனது அழிவு வேலை இத்தனை என்றுதான் கணக்கிட்டுச் சொல்ல முடியுமா? இல்வளவெல்லாம் செய்துவிட்டாயே, போனது போகட்டும். உனது பழமைத் திரையையாவது கொஞ்சம் அகற்று; எங்களுக்கேற்பட்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் ஐயங்களைப் போக்கிக் கொள்கிறோம் என்றால், அதற்காகிலும் இணங்குகிறாயா? அதுவும் இல்லையே?'' என்று சொல்லத்தான் தோன்றுகிறது.

இப்படி நீள நினைந்து பார்க்கிறபோது, இந்தக் காலம் ஆதியந்தமற்ற நிரந்தரமானதென்றே முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. அப்படியானால் ஆதியந்த மற்ற இறைவனும் காலமும் ஒன்றா? இறைவன் ஆதி யற்றவன்; அந்தமுமற்றவன். காலமும் அப்படித்தான் என்றால் அப்போது காலம் இறைவனுக்கு ஒப்பானதா? சே சே, அப்படியிருக்க முடியாது. இறைவன் காலத்

திற்கு அப்பாற்பட்டவன். அவனைக் காலம் ஒருவகை யிலும் பாதிக்க முடியாது. காலத்தால் பாதிக்கப்பட்ட வனாக இருந்தால் அப்பொழுது அவனுக்கு முதலிறுதி இருந்தே தீரவேண்டும்.

நம் முன்னோர்கள் இதை ஒரு கதைமூலம் வெகு அழ காகச் சொல்லியிருக்கிறார்கள். மார்க்கண்டனுடைய வரலாற்றில் காலத்தைக் கடவுளுடைய கையாள் என்று காட்டியிருக்கிறார்கள். இறைவனால் உண்டாக்கப் பட்டது காலம்; அதை அவரால் அழிக்கவும் முடியும்; ஆனால் காலம் அவரை எவ்வகையிலும் பாதிக்க முடியாது.

சித்தர்களும் யோகிகளும் தங்கள் உடம்பை இந்தக் காலம் பாதிக்காதவாறு வாழக் காயகற்பங்கள் செய்த தாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. காயகற்பம் செய்யும் முறைகளெல்லாம் இன்றும் செய்யுள் வடிவத்திலே தமிழில் இருக்கின்றன. ஆனால் இக்காலத்தில் அதைச் செய்து வெற்றி பெறுபவர்களை நாம் காண்பதில்லை.

முடிவாகச் சொல்லுமிடத்து, காலத்தைப் பற்றி நமக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றே. அதாவது, 'காலத்தை நம்மால் வெல்ல முடியவில்லை; ஆனால் காலம் நம்மை மட்டுமல்ல, மற்ற உயிர்ப் பிராணிகளை மட்டு மல்ல, உயிரற்ற பொருள்களையும் பாதிக்கின்றது' என் பதே. காலத்தைப் பற்றி நமக்குத் தெரியாததும் முக்கிய மாக ஒன்றுதான். காலம் என்று தொடங்கிற்று என்பதும் தெரியாது; என்று முடியும் என்பதும் தெரியாது.

# காற்றாடி

ஒரு சிறிய ஓலை நறுக்கு. அதன் மையத்தில் சின்னத் தொளையிட்டு முள்ளைச் செருகிச் சோளத்தட்டுடன் இணைத்துக் காற்றிலே பிடித்துவிட்டால் வந்துவிட்டது அதற்கு உயிர். ஒரே வேகம். கிறுகிறுவென்று சுற்றத் தொடங்கி விடுகிறது. இந்தக் காற்றாடியின்மேல் சிறு வயதிலேயே ஏற்பட்ட விருப்பம் இன்னும் எனக்கு மாறாதிருக்கின்றது. அதன் சுழற்சியிலே எத்தனை உணர்ச்சிகள் பிறக்கின்றன! வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிப் பெரிய விளக்கம் செய்பவன் அதைக் காற்றாடிக்கு ஒப்பிடுகின்றான். காற்றாடியின் முனைகள் மேலும் கீழுமாய் மாறி மாறிச் சுற்றுவதுபோல வாழ்க்கை ஓங்கியும் தாழ்ந்தும் மாறிக் கொண்டிருக்கிறதாம். ஒரு நிலையில் நில்லாது அலையும் உள்ளத்திற்குக் காற்றாடியை உவமை கூறுகிறார் தாயுமானவர்.

சித்திரைத் திங்களிலேயே காற்றாடிக்கு உயிர் வந்துவிடும். கறங்கோலையைத் தேடிச் சிறுவர்கள் புறப்பட்டு விடுவார்கள். ஆனால் ஆடித் திங்களில்தான் காற்றாடிக்கு நல்ல இளமை. அப்பொழுது அதன் முறுக்கும், வேகமும் சொல்லி முடியா.

காற்றுத்தேவன் காற்றாடியின் காதலன். அவன் தொட்டுவிட்டால் அதற்கு உண்டாகும் இன்பம் கரை கடந்து விடுகிறது. அந்த முள் மட்டும் இல்லாவிட்டால் ஓலை நறுக்கின் களியாட்டம் எப்படி முடியுமென்றே சொல்ல முடியாது.

காற்ருடியின் முதுகிலே தொளையிட்டுக் கொண்டு முள் அசையாது நிற்கிறது. அது துன்பம் தருகிறதா, காதலர் கூட்டத்திற்கு இடைஞ்சல் செய்கிறதா, துணை செய்கிறதா என்று எண்ணிப் பார்க்கும்போது பெரிய பெரிய தத்துவ ஆராய்ச்சிகள் எல்லாம் பிறந்து விடுகின்றன. எது விடுதலை, எது கட்டுப்பாடு என்றெல்லாம் உள்ளத்திலே விவாதம் ஏற்பட்டுவிடுகிறது. ஆனல் இவற்றிற்கெல்லாம் காற்ருடி செவி சாய்க்கிறதா என்ன? அது ஒன்றையும் கவனியாது தான் பெற்ற இன்பத்திலே மூழ்கி மூச்சுக்கூட வாங்காமல் விர்ரென்று தலைகால் தெரியாதபடி வட்டமிடுகின்றது. அதுமட்டுமா? சுற்றும்போது அந்த ஓலை தனது சொந்த உறுவத்தையே இழந்து, ஒரே வட்டமாகின்றது. இறைவனை அச்சாணியாகக் கொண்டு வாழும் ஞானிகளும் இப்படித்தான் தம் தனிவடிவம் இழந்து, இன்பப் பெருக்கிலே வட்டமிட்டுக் கொண்டிருக்கிருர்களாம்.

காற்ருடி சுற்றும்போது அதைக் கவனித்துப் பாருங்கள். மாயோன் கையில் திகிரி போன்ற ஒரு வட்டம் தோன்றுகிறதா? நன்கு கவனியுங்கள். அந்த வட்டத்திலே காற்ருடி இல்லாத இடமிருக்கின்றதா? தொட்டுக் காட்ட முடியுமா? முடியாது. அது இறைவனைப் போன்று எங்கும் உள்ளதாய் ஆனல் அதே வேளையில் ஓரிடத்திலும் இல்லாதிருக்கின்றது.

சிறுவர்களுக்கு இவைபோன்ற ஆராய்ச்சிகளைப் பற்றிக் கவலையில்லை. அவர்களுக்குக் காற்ருடியின் வேகத்திலேதான் கண். காற்ருடி சுற்றுகிறது. சிறுவர்கள் அதைக் கண்டு உவகை மீறிக் குதிக்கிருர்கள்; கை தட்டிக் களிக்கிருர்கள்.

சுழன்று சுழன்று காற்றாடி அவர்களுக்கு மாறாத இன்பந் தருகிறது. அதைப் போலவே மூச் சிருக்கும் வரையில் ஓயாமல் முயன்று முயன்று நான் உலகிற்கு இன்பம் அளிக்கவேண்டும் என்பது என் பேராவல். காற்றாடியைப் பார்க்கும்போதெல்லாம் அந்த ஆவல் மேலோங்கி நிற்கிறது.

# மழைக்காலக் காட்சி

காலை வேளையிலே உலாவப் போவதென்றால் எனக்கு எப்பொழுதுமே அளவில்லாத விருப்பம். அதிலும் நீலமணிக் குன்றுகள் அழகாகப் பின்னால் நிமிர்ந்து நிற்கும் இந்த நிலங்களின் வழியே தனித்துப் போக வாய்ப்புக் கிடைத்துவிட்டால் சொல்லவேண்டியதே இல்லை.

அதனால் இன்று கிழக்கு வெளுத்துப் பகலின் அறிகுறி சிறிது தோன்றியவுடனே புறப்பட்டுவிட்டேன். இரவெல்லாம் ஒரே மழை. சளசளவென்று சிறிது நேரம் பெய்யும்; சிணுங்கு சிணுங்கென்று கொஞ்ச நேரம்; ஓய்வென்பதே கிடையாது.

இப்பொழுது மழை நின்று விட்டதென்றாலும் மரங்களும் செடிகளும் முத்துமுத்தாகத் துளிகளைத் தாங்கி நிற்கின்றன. சிறகை உலர்த்திக் கொண்டு காகமொன்று பன்னீர் மரத்தில் போய் அமர்கிறது. மரம் அழகிய வெண்மையான பூக்களோடு மழை முத்துக்களையும் பூமியில் உதிர்க்கின்றது. குறும்புச் சிறுவர்கள் மூவர் மரக் கொம்புகளைக் குலுக்கிக் குலுக்கி ஒருவர்மேல் ஒருவராகத் தண்ணீர்ச் சொட்டுக்களைச் சிந்திக் கொண்டிருக்கிறார்கள்.

வானவெளி சிறிதும் கண்ணுக்குப் புலனாகவில்லை. புகையைச் சுருளாக மடித்து வானத்தையே மறைத்துப் பரப்பிவைத்ததுபோல எங்கும் மேகப் படலம். கறுத்துச் சூல் முதிர்ந்த கொண்டல் அல்ல; கொட்டிப் பட்டை செய்யக் குவித்த வெண் பஞ்சுபோன்ற மஞ்சுமல்ல.

வெண்மையிலே கறுப்பை அள்ளித் தெளித்து ஒரு பொட்டு நீலத்தையும் கூட்டி அவைகளையும் நன்கு ஒன்ருேடொன்று சேராதபடி ஒளியற்ற வண்ணக் கலவையாகச் செய்தது போன்ற புகைமேகங்கள்.

தூக்கம் நன்கு தெளியாத குழந்தை சிணுங்கிக் கொண்டிருப்பது போலிருந்தது வானம். ஒளியில்லை; தெளிவில்லை; சிடுமூஞ்சிக் குறிப்புத்தான் தென்பட்டது.

இரு மருங்கிலும் பச்சைப் பசேலென்று தோன்றும் சிற்ருேடையுடனே நீங்கள் சிறிது தொலையாவது நடந்திருக்கிறீர்களா? நடக்கும்போது அதைப்போல அருமை நண்பன் யாரிருக்க முடியும்? மழலை கொஞ்சுகின்ற பாட்டு வேண்டுமா? பாறையில் ஏறித் தத்திக் குதிக்கும் ஆட்டம் வேண்டுமா? நெளிந்து, நெளிந்து, சுழிந்து சுழிந்து, வேடிக்கை காட்ட வேண்டுமா? ஓடையைப் போன்று யாரால் முடியும்?

எனக்குச் சிற்ருேடையொன்றும், எதிரிலே பசுநீலம் போர்த்த மலைத்தொடரும் இருந்தால் போதும். உலாவும் வேளையில் வேறு துணையே வேண்டியதில்லை.

இன்று ஓடை இளமைப் பருவம் அடைந்து விட்டது. அதன் நடையிலும், குரலிலும் இளமையின் ஆற்றலும் மிடுக்கும் வெளிப்படுகின்றன. கரையோரத்திலே வளர்ந்து பூத்திருந்த செவ்வரளி சிவந்து, நாணத்துடனே குனிந்து ஓடையைத் தனது பூவிதழ்களால் முத்தமிடுகின்றது. மெல்ல வந்த காற்றுத்தேவன் தான் இவர்களுக்கிடையேயுள்ள காதலை இவ்வாறு வெளியில் காட்ட உதவி செய்பவன்.

செவ்வரளி குனிந்த வேளையில் ஒரு சின்னஞ் சிறிய சிங்கார மீன்கொத்தி அதன்மேல் வந்து அமர்ந்தது.

உடம்பெல்லாம் நீல நிறம்; மார்பிலே வெண்மை வட்டம்; பாக்கின் செந்நிறங் கொண்ட பெருமூக்கு. அந்த அழகுக் குருவி ஆடி அமர்ந்திருப்பதே ஒய்யாரம்! இன்று புது வெள்ளத்தில் தெளிவில்லையாகையால் இச் சிறிய மீன் கொத்திப் பெருமூக்கனுக்கு நல்ல வேட்டை கிடைக்காது. இருந்தாலும் ஆட்டமும் ஓட்டமும் குறைய வில்லை.

ஓடையின் பக்கத்திலே தென்னந்தோப்பு ஒன்று இருக்கிறது. அதைக் கடந்தால் சிறு தொலைவில் ஒரு மாந்தோப்பு. எல்லாம் சேலத்துப் பேர்போன நடுச்சாலை. வரப்போகும் வசந்தக்காதலனை எதிர்கொண்டழைக்க அங்கே இப்பொழுதே முன்னேற்பாடு தொடங்குகின்றன. பழுத்த பழைய உடைகள் களைந்தெறியப்படுகின்றன; புது உடைகளுக்கு ஆணையிட்டாகி விட்டது.

சோலைக்குள்ளிருந்து செம்போத்து ஒன்று கூவிக் கொண்டிருக்கிறது. மைனுப்பறவைகள் ஒயிலாக நிலத்தில் அமர்ந்து வண்ண வண்ணப் பேச்சுப் பேசிக்கொண்டு காலைச் சிற்றுண்டி தேடுகின்றன.

மறுபடியும் மழை இந்த வேளையில் தொடங்கி விட்டது. மழையென்ருல் பெரு மழையில்லை; கொசுத் துளி. அடாடா, அது மெல்ல வந்து முகத்தைத் தீண்டு வதில் எவ்வளவு இன்பம் இருக்கிறது!

வருமுன் அணை போடும் மனிதர்கள் சிலர் வெளியே புறப்படும்போதே குடை, கைத்தடி என்றிப்படிப் பல தற்காப்புச் சுமைகளைக் கொண்டுசெல்வார்கள். பாவம், அவர்களுக்கு இந்த இன்பம் தெரியவே தெரியாது.

வானை அண்ணுந்து நோக்கினேன். இன்னும் ஒரே மேகப் போர்வைதான். கிழக்கில் மட்டும் பகலவனின்

ஆதிக்கம் ஓங்குவதுபோலத் தோன்றியது. மற்ற இடங்களில் ஒரு வகையான மாறுதலுமில்லை. திரையின் பின்புறத்தில் மங்கிய ஒளியைக் கொண்டுசென்றால் முன்புறம் எப்படிச் சற்று ஒளி பெறுமோ அப்படி மென்மையான வெளிச்சம் படர்ந்திருக்கிறது.

மேற்கில் நிமிர்ந்து நிற்கும் மலையுச்சி இதுவரை தெரியவே யில்லை. கீழே நிலப் பசுமை; மேலே புகை மேகக் கூட்டம். இவ்விரண்டிற்கிடையே ஓர் ஆழ்ந்த கரு நீலம்—அவ்வளவுதான் மலையின் தோற்றமாக இருந்தது.

இப்பொழுது கொசுத் துளி தூறலாக மாறிவிட்டது. சோளக் கொல்லையில் ஒரே சலசலப்பு.

குறும்பை ஆடுகள் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு பேய விருட்டமில்லாது நிற்கின்றன. அவற்றின் குட்டிகள் கத்துகின்றன. இடையர்கள் கம்பளியால் உடம்பை மறைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்.

இரட்டைவால் கரிக்குருவி மட்டும் உற்சாகமாக ஆனைக் கற்றாழையின் உயர்ந்த பூக்கம்பத்திலே அமர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

நடப்பதால் உண்டாகும் வெப்பமும் தூறலினால் ஏற்படும் குளிர்ச்சியும் சேர்ந்து எனக்கு ஓர் எழுச்சியைக் கொடுத்தன. மேலும் நடந்துகொண்டே இருந்தேன். திடீரென்று ஓடை வளைந்துவந்து என் முன்பு காட்சி யளிக்கும்; மறுபடியும் வேறு திசையில் ஓடி மறைந்து விடும். அந்த விளையாட்டைக் கண்டு மகிழ்ந்துகொண்டே சென்றேன்.

மழை நின்றுவிட்டது. மேகப் படலம் இடைவெளி விடத் தொடங்கிற்று. மலையின் முடியிலே கட்டித்

தயிரை வாரி ஊற்றி ஒழுகவிட்டிருப்பதுபோல வெண் மேகம் ஒன்று அதன் மணி முடியாக விளங்குகிறது.

மேகப் பொந்துகளின் வழியே சூரியனின் பொற் கதிர்கள் புகுந்து பாய்ந்து நீல மலைச் சாரலிலே அழகிய பசும் பொன் பரப்புக்களை உண்டாக்கிக்கொண்டிருந்தன. ஆகா! திருமாலின் மார்பில் விளங்கும் கவுத்துப மணி போன்று அவைகள் விளங்குகின்றன. அவற்றில் மயங் கும் பொன் வண்ணம், நீலம், பசுமை இவற்றையெல் லாம் என்னவென்று சொல்வது!

இந்த அழகுகளையெல்லாம் காணக் கொடுத்து வைத்திருக்கவேண்டும். மாரிக் காலத்தின் அழகே தனி. வீட்டிற்குள்ளிருந்தால் கண்டுகளிக்க முடியாது. எங்கே பார்த்தாலும் பசுமையும், புதிய இளமை புகுவதற்கு வேண்டிய அறிகுறிகளும் தென்படுகின்றன. இயற் கையில் உண்டாகும் புதுமை என்னுள்ளும் பாய்ந்து வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

நான் இயற்கை அன்னையை மனமார வாழ்த்திவிட்டு எழுச்சியோடு திரும்பினேன்.

# கரிக் குருவி

'காகங் கரைந்தது காலையுமாயிற்று' என்று தொடங்கும் ஓர் அழகிய பாட்டு உண்டு. அதிகாலையிலே காக்கையின் குரலை நாம் கேட்கிறோம்; மெய்தான். ஆனால் அதற்கு முன்னாலேயே மற்றொரு குருவி குரல் கொடுப்பதைக் கவனித்தீர்களா? அதுதான் கரிக் குருவி. காக்கைக்கு முன்னெழுந்து கூவத் தொடங்குகிறது அந்தச் சின்னப் பறவை.

உழவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். 'கரிக் குருவி கூப்பிடுகிறது; கிழக்கு வெளுக்கும் வேளை வருகிறது; கவலை இறைக்கப் புறப்படலாம்' என்று அவர்கள் பேசிக் கொள்வார்கள்.

எனக்கென்னவோ இளமை முதற் கொண்டு அந்தக் குருவியைக் கண்டால் பிடிக்கிறதில்லை. அந்தக் காலத்திலே என்னை இரட்டை வால் என்று சொல்வார்கள். அதாவது நான் மிகவும் குறும்பு செய்யும் பிள்ளை என்பது பெரியவர்களின் எண்ணம். ஆனால் நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. இரட்டைவால் என்று யாராவது பேசி விட்டால் எனக்குக் கோபம் கோபமாய் வரும். கரிச்சான் என்னும் கரிக் குருவிக்கு இரட்டை வாலுண்டு. அதனால் அதை இரட்டைவால் கரிக் குருவி என்று எங்கள் மாவட்டத்தில் அழைப்பார்கள்; ஆனால் அந்த வாலுக்கும் எனக்கு அதன் மேலுள்ள வெறுப்புக்கும் யாதொரு தொடர்பும் இருக்கவில்லை.

கன்னங் கரேலென்று காக்கை இருக்கிறது; குயிலிருக்கிறது. அவை போதாவா? இன்னும் ஓர் இருட்டு நிறக்

குருவி எதற்காகப் பிறந்திருக்கிறது? காக்கையாவது உலகத்தைத் துப்புரவு செய்கிறது; குயிலாவது இனிமையாகக் கூவுகிறது. இந்தக் கரிக் குருவி என்ன செய்கிறது? வைகறையில் துயில் எழுப்ப ஒரு நல்ல அழகிய பறவை இருக்கக் கூடாதா? அதனுடைய குரலைச் சற்றே கேளுங்கள். எத்தனை அருவருக்கத்தக்க குரல். இவ்வாறாக நான் வெறுப்போடு எண்ணமிடுவேன்.

இரட்டை வால் கரிக் குருவி வஞ்சமும் சூழ்ச்சியும் மிக்கது. அது ஆட்டின் மேலே ஒய்யாரமாக வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்து கொள்ளும். ஆடு பாவம், மேய்ந்து கொண்டே போகும். போகப் போகச் செடிகளின் மேலே, புல்லின் மேலே, தரையின் மேலே ஒட்டிக் கொண்டிருக்கும் வெட்டுக்கிளி முதலிய சிறு பூச்சிகள் அச்சத்தால் பறந்து வேறிடம் பார்த்துக்கொள்ளக் கிளம்பும். இந்தக் குருவி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து லபக்கென்று, அவற்றை வாயில் போட்டுக் கொண்டு மறுபடியும் ஆட்டின் மேலே சவாரி செய்யத் தொடங்கிவிடும். அதைக் காணும்போது எனக்கு வெறுப்பு மேலும் பொங்கியெழும். சாதுவான ஆட்டை இப்படித் தன்னலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வதைக் காண எனக்குப் பொறுக்க முடியவில்லை.

ஆனால் அண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியால், அந்த வெறுப்பு மாறிவிட்டது.

ஒரு மாலை வேளை. பூங்காற்று மெல்லியதாய் மிக இனிதாய் வீசிக்கொண்டிருந்தது. நான் மேட்டு நிலங்களிடையே உலாவிக்கொண்டிருந்தேன். ஓரிடத்தில் ஒரு கிழவன் செம்மறி ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். வழக்கம்போல இரட்டை வால் கரிக் குருவி ஒன்று

ஆடொன்றை அரசு கட்டிலாகக் கொண்டு அதன் மேலமர்ந்து தன் வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொண்டிருந்தது. நான் அதன் மேல் கல்லை விட்டெறிந்தேன்.

"சாமி, ஏன் உங்களுக்கு அந்தக் குருவியின் மேல் அத்தனை கோபம்?" என்று கேட்டுக்கொண்டே இடையன் என்னை நோக்கி வந்தான்.

"அதற்கென்ன அத்தனை கொழுப்பு? ஆட்டின் முதுகிலே உட்கார்ந்து கொண்டு அதன் வேலையைப் பார்! எத்தனை வஞ்சனை!" என்றேன் நான்.

"அந்தக் குருவியாவது நல்லது! மனிதன் அதை விடப் பொல்லாதவன்!" என்றான் கிழவன். எனக்குத் திடுக்கிட்டது. "என்ன அப்படிச் சொல்லுகிறாய்? மனிதன் எப்படிப் பொல்லாதவனாவான்?" என்று கேட்டேன்.

"கரிக் குருவி ஆட்டின் மேலே தந்திரமாக உட்கார்ந்து கொண்டிருப்பது மெய்தான். ஆனால் அது ஆட்டின் வயிற்றில் அடிப்பதில்லையே! தனக்கு வேண்டிய இரையைத் தானாகவே தேடிக் கொள்கிறது. மனிதன் அப்படி இல்லை" என்றான்.

அவன் சொல்வது எனக்கு ஒரு புதிராக இருந்தது. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், "நீ என்னவோ பேசுகிறாய். அதில் ஒன்றும் கருத்து இருப்பதாகத் தோன்றவில்லையே?" என்று மிடுக்கோடு கேட்டேன்.

"கருத்தா? இதுதான் கருத்து: அந்தக் குருவி ஆட்டின் மேலே உட்கார்ந்திருந்தாலும் அதன் உணவைத்

தொடுவதில்லை. ஆடு புல்லை மேய்கிறது. கரிக் குருவி பூச்சிகளைப் பிடித்துத் தின்கிறது. ஆடு வாகனமான தோடு சரி. ஆனல் எங்களைப் பாருங்கள். எசமானர்கள் எங்கள் மேலே உட்கார்ந்திருக்கிறார்கள். எங்களைச் சக்கையாகப் பிழிந்து வேலை வாங்குகிறார்கள். அதோடு விட்டு விடுகிறார்களா என்ன? அதுதான் இல்லை. நாங்கள் பாடுபடுவதால் கிடைக்கும் பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். கைக்கெட்டினது எங்கள் வாய்க்கு எட்டுவதில்லை. அரைவயிறு கஞ்சிக்குக்கூட எங்களுக்கு உரிமை கிடையாது. என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் இந்த ஆடுகளை நாள்தோறும் காலையிலிருந்து பொழுது சாயும் வரையில் மேய்க்கிறேன். கண்ணுங் கருத்துமாக வளர்க்கிறேன். ஆனல் ஆடுகள் குட்டி போட்டுப் பெருகப் பெருகப் பண்ணுடி விற்றுப் பணத்தை யெல்லாம் பையில் போட்டு நிரப்பிக்கொள் கிறார். எனக்குக் கஞ்சிக்கே திண்டாட்டம்'' என்றான் அவன்.

அவன் சொன்னது உண்மை. முதல் படைத்தவன் கைக்குள் உழைப்பாளி அடங்கிக் கிடக்கிறான். அவன் உழைப்பால் கிடைக்கும் பயனைக் கவர்ந்து கொள்கிறான். பாடுபட்டவன் வயிறு வாடுகிறான். இதை எண்ணிப் பார்த்தால் கரிக் குருவி மனிதனைவிட மேலானதுதான்.

அந்த இடையனைச் சந்தித்துப் பேசியது முதல் நான் கரிக் குருவியை அருவருப்போடு நோக்குவதை விட்டு விட்டேன்.

# தைப் பொங்கல்

பொங்கலோ பொங்கல்! தை பிறந்து விட்டது. முதல் நாள் பெரும் பொங்கல். இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல். மூன்றும் நாள் பூப் பொங்கல். பொங்கலோ பொங்கல்!

தைத்திங்கள் முதல் நாள். எங்களூரில் இன்று ஒரே கலகலப்பு. எங்கே பார்த்தாலும் மகிழ்ச்சி பொங்குகிறது. அதிகாலையிலேயே காப்புக் கட்டு முடிந்துவிட்டது. பொன் மஞ்சள் நிறமான ஆவாரம் பூவும், வெண்ணிற மான பூளைப் பூவும், கரும் பச்சை நிறமான வேப்பந் தழையும் காப்புக் கட்டாக விளங்கி, பனி தொலைந்து பூவும் புது மணமும் தோன்றப் போகிறது என்பதற்கு அறிகுறியாக எங்கு பார்த்தாலும் விளங்குகின்றன.

மக்களிடையே ஒரு பரபரப்பு; குதூகலம். சிலர் புதிய பட்டி செய்கிறார்கள். சிலர் பழைய பட்டியைப் புதுப்பிக்கிறார்கள். வண்டி வண்டியாக மூங்கில் வந்து கொண்டே இருக்கிறது. இருபது மைல் முப்பது மைல் போயெல்லாம் நல்ல நல்ல மூங்கில் வாங்கி வந்திருக் கிறார்கள்.

ஊருக்கு அருகில் இருந்த பட்டிகளெல்லாம் தொலை விலுள்ள நிலங்களுக்குச் செல்கின்றன. ஊரடியிலேயே மாட்டுப் பொங்கலென்றால் அத்தனை நன்றாக இராதாம்.

சிறுவர்கள் மாடுகளின் கொம்புகளுக்குச் சாயங் கட்டுவதில் ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக் கொள்ளுகிறார்கள்.

பொங்கலுக்கென்று புதிய பானைகள், சட்டிகள் ஒவ்வொரு வீட்டிலும் குவிகின்றன.

கொண்ட வீட்டிலிருந்து இளம் பெண்ணும், புது மருமகனும் இணை இணையாக வந்து சேருகிறார்கள்.

எங்கும் பூரிப்பு; சிரிப்பு.

இவ்வாறு அந்த நாள் முடிகின்றது. மறுநாள் நடக்கும் மாட்டுப் பொங்கல்தான் தனிச் சிறப்புள்ளது. உழவனுக்கு மாடு தெய்வமல்லவா?

அன்று உச்சிப்பொழுதிற்கு மேல் ஊரில் யாரும் இல்லை. பொங்கல் வைக்கப் பட்டிக்குப் புறப்படுவது ஓர் அழகான காட்சி. இடுப்பிலே புதிய சேலை, கொண்டை நிறையப் பூ; நெற்றியிலே குங்குமப் பொட்டு; வாய் நிறைய வெற்றிலை; இதழ் நிறையப் புன்முறுவல்; காதிலும், கழுத்திலும், கையிலும், நகை—இப்படிப் பெண்கள் புறப்படுவார்கள். புது மருமகனுக்குப் புது வேட்டி, சரிகை மின்னும் மேலங்கி; இப்படிக் கோலம் கொண்ட அவர்களும், அவர்களோடு நகையாடிச் சிரித்துப் பேசிக்கொண்டு இளைஞர்களும் வருகிறார்கள். பெரியவர்கள், "நேரமாகிவிட்டது. எல்லோரும் புறப் படுங்கள். வண்டியில் பொங்கலுக்கு வேண்டியவற்றை யெல்லாம் மறக்காமல் வைத்துக் கொண்டீர்களா? இளநீர் வந்து சேர்ந்துவிட்டதா?—எங்கேயடா அந்த மாரப்பன்? ஏண்டா வண்டியைப் பூட்டவில்லையா?" என்று இப்படித் தூண்டி விரைவு படுத்துகிறார்கள்.

"பட்டிப் பொங்கல் வைக்கப் போகிறோம்" என்று சொல்லிப் பெரியவர்களையெல்லாம் மற்றவர்கள் கும்பிடு கிறார்கள். அவர்களுடைய வாழ்த்துக்கள் கிடைக்கின்றன.

பறை ஒலிக்கிறது. மேளம் முழங்குகிறது. அதிர் வெடி அதிர்கிறது.

எல்லோரும் அவரவர்கள் பட்டிக்குப் புறப்பட்டாய் விட்டது.

பட்டி ஆவுடையாருக்கு ஒரு பொங்கல், முருகனுக்கு ஒரு பொங்கல், குல தெய்வத்திற்கு ஒன்று, மாரியாத்தாளுக்கு ஒன்று, மாகாளியாத்தாளுக்கு ஒன்று—என்று இப்படியாகக் குறைந்தது ஐந்து பொங்கல். இவற்றிற்கு மேல் வேறு தெய்வங்களுக்கும் பொங்கல் வைப்பதுண்டு.

புன்செய் நிலத்திலே பட்டி அருகிலே மும்மூன்று கற்களாகக் கூட்டி அடுப்பிட்டுப் பொங்கல் வைப்பதில் ஒரு தனி இன்பம் இருக்கின்றது. பெண்களுக்குத்தான் என்ன கொண்டாட்டம்.

பொழுது இறங்குவதற்குள் பொங்கல் பொங்கிச் சமைந்துவிடும். பலவிதமான காய்கறிகள்; பூசனியும், மொச்சையும் இல்லாத பொங்கலே கிடையாது.

தேய்த்துக் கழுவி வயிறுர மேய்த்து வந்த மாடுகளெல்லாம் பட்டிக்குள் சேர்ந்துவிட்டன.

மாடு மேய்ப்பவன் அன்று பட்டினி காப்பான்; அவனுடைய திருநாள் அது. பண்ணைக்காரனுக்கும் அது திருநாள்தான். இருந்தாலும் மேய்ப்பவனுக்குத்தான் முதலிடம். அவன் புல்லாங்குழலை எடுத்து அடிக்கடி ஊதுகிறுன்.

பட்டிக்குள்ளே சிறு குளம் அமைத்தாய்விட்டது. அதைச் சுற்றிலும் விருந்து படைக்கிறுர்கள். மஞ்சள் கொத்து, கரும்பு எல்லாம் மங்களகரமாக அமைந்து அழகு செய்கின்றன. மண்விளக்கு ஒளிவிடுகின்றது.

வழிபாடு நடக்கிறது. பண்ணையாட்கள் குழலூது கின்றனர். எல்லோரும் கைகூப்பி வணங்குகிறார்கள்.

முதலில் பட்டிக் கடவுள் பட்டி ஆவுடையாருக்குப் பொங்கல் படைக்கிறார்கள். பட்டியைச் சுற்றி நீர் தெளித்துக் கொண்டே பட்டியாரை உணவு கொள்ளும் வேண்டுகிறார்கள்.

கை கழுவு பட்டியாரே—கை கழுவு
வாய் கழுவு பட்டியாரே—வாய் கழுவு
உண்ணுண்ணு பட்டியாரே—உண்ணுண்ணு

என்று உணர்ச்சியோடு பாடி வருகிறார்கள். அடுத்தது மாட்டுக்குச் சோறூட்டுதல்.

பிறகு பட்டிக்குள்ளேயே எல்லோருக்கும் பொங்கல் விருந்து நடக்கிறது. காய்ந்த துவரை மாறு வெளியே குவியலாகக் கிடக்கிறது. அதை அள்ளி யிட்டுக் கொழுந்து விட்டெரியும் தீ மூட்டுகிறார்கள். அதுதான் பொங்கலருந்தும்போது வெளிச்சம்.

கண்ணுக்கெட்டிய தொலை வரையில் இந்த வெளிச் சந்தான் ஆங்காங்கே தெரிகின்றன. இந்தக் காட்சி ஒரு தனி இன்பம். எங்கும் இருட்டு. இடையிடையே கொழுந்தாடுகின்ற தீ.

சங்கு முழங்கி ஒலியெழுகின்றது. 'பட்டி பெருகுக, பால் பானை பொங்குக!' என்று வாழ்த்தொலி முழங்கு கிறது.

பின்னர் மாடுகளுடன் ஒரு விளையாட்டு. பட்டியில் ஒருபுறம் மட்டும் வழிவிட்டு அதில் மாவிலைத் தோரணத் தைக் கட்டிவிடுகிறார்கள். மாடுகளெல்லாம் பட்டிக்குள் இருக்கின்றன. திடீரென்று ஆரவாரமும், கொட்டு முழக்கும் வானைப் பிளக்கின்றன. மாடுகள் மிரண்டு

அங்கும் இங்கும் ஓடுகின்றன. தோரணத்தை அறுத்துக் கொண்டு அவை வெளியே போகும் வரையில் அவற்றை மிரட்டுவார்கள்.

மாடுகள் வெளியே வருவதை மாடு மேய்ப்பவன் கவனித்துக் கொண்டே இருப்பான். அவன் கை நிறையப் பொங்கல் இருக்கும். மாடுகள் வந்தவுடன் அவன் அதைத் தன் வாயில் போட்டுக்கொண்டு பூமியில் விழுந்து அவற்றை வணங்குவான். 'நீங்கள் கொடுத்த உணவு என்று அவன் கும்பிடுவது நியாயந்தானே?

இந்த வேளையில் பட்டியைச் சுற்றி மாவிளக்கு எடுப்பதுண்டு. வாணங்கள் வானத்தில் ஊசலிட்டேகும். பழம் சூறை விடுவார்கள். பண்ணையாட்களுக்கு அது ஒரு விளையாட்டு, அவர்கள் பழத்தைப் பிடிக்க ஓடி விழுந்து புரளுவார்கள். ஒரே குதூகலம்.

பொங்கல் முடிந்தது. தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டு எல்லோரும் வீடு திரும்புகின்றனர்.

மூன்றுவது நாள்தான் பூப் பொங்கல். இளஞ் சிறுமிகளுக்கும், பெண்களுக்கும் தனியாக அன்று வேடிக்கை, ஆட்டம் எல்லாம்.

ஆடவர்களிற் பலர் அண்டையில் பால் எடுத்துக் கொண்டு மாலைக் கோயிலுக்குச் சென்று விடுவார்கள் கடவுளுக்குப் பால் மஞ்சனம் விட்டு ஆட்டுவார்கள்.

பல கிராமங்களுக்குப் பொதுவாக ஒரு மாலைக் கோயில் இருக்கும். அங்கேதான் இன்று பெருங் கூட்டம். ஆண்களின் ஆட்டமும் பாட்டும் அங்கேதான்.

சலகைக் காளை என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மாட்டுப் பொங்கலன்று பிறந்த சேங்கன்றுகளை இறைவனுக்குக் காணிக்கையாக விட்டுவிடுவார்கள். அவற்றிற்கு

ஒரு வேலையுங் கிடையாது. எப்பொழுதும் தின்று கொழுத்து சுற்றிக்கொண்டிருக்கும். இன்று அந்தக் காளை களைப் பிடித்துச் சலங்கை கட்டி ஆட்டம் பழக்குவார்கள். கோயிலைச் சுற்றியும் பல மிடுக்கான தோற்றங்கொண்ட காளைகளைப் பார்க்கலாம்.

ஒரு பக்கத்தில் ஒயில் கும்மி அடிக்கிறார்கள்; வள்ளி யம்மன் ஒயில் கும்மி. தலைப்பாகை வரிந்து கட்டிய இளைஞர்கள் எதிர்எதிராக நின்று சந்தத்திற்குத் தக்க வாறு ஆடிப் பாடுகிறார்கள். கால் நாழிகைக்கு ஒரு புது வகையான ஆட்டம். அவர்களைச் சுற்றி ஒரு பெருங் கூட்டம்.

இங்கே இப்படி இருக்கும்போது ஊரிலே பெண்கள் கூடிப் பூப்பறித்து வருவார்கள். பிறகு பெரிய தனக்காரர் வீட்டிலே முதற் கூட்டம் கூடுவார்கள். அங்கு தொடங் கியே எந்த நிகழ்ச்சியும் நடக்கவேண்டும். மார்கழித் திங்க ளெல்லாம், அதிகாலையில் வாசலை மெழுகிக் கோலமிட்டு வைத்து வணங்கிய பிள்ளையாரை எடுத்து வருவார்கள். வீட்டுக்கு வீடு கும்மி, பாட்டு, சிரிப்பு—ஒரே அமர்க்களம்.

பிறகு எல்லோருமாக ஆற்றுக்குச் சென்று பிள்ளை யாரை விட்டு விட்டுப் பொழுது சாயும் வரை விளை யாட்டிலும் கூத்திலும் காலம் கழித்து வீடு திரும்பு வார்கள்.

கோயிலுக்குப் போன ஆண்களும் அந்த வேளையில் வந்து சேருவார்கள்.

பொங்கல்தான் எங்களுக்குப் பெரிய கொண்டாட் டம். பொங்கலோ பொங்கல். பட்டிப் பொங்கல், பால் பொங்கல்; பொங்கலோ பொங்கல்!

கொங்குநாட்டு ஊர்களில் பொங்கல் நடைமுறை இது.

# மறந்த பருவம்

என் அன்பர்களே, உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நன்கு எண்ணிப் பார்த்து விடை கூறுங் கள். இல்லை; நீங்கள் கூற வேண்டியதில்லை; உங்கள் விடையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு நீங்கள் சொல்லாமலே அது என்னவென்று தெரியும். அதுதான் 'இல்லை' என்பது.

ஆமாம், கேள்வி இன்னதென்று சொல்லாமலே விடையைச் சொல்லுகிறீர்களே என்று கேட்கிறீர்களோ? இதோ அந்தக் கேள்வி. குழந்தைப் பருவத்திலே உங்கள் இளம் உள்ளத்தில் எழுந்த எண்ணங்கள், உணர்ச்சிகள், அதிர்ச்சிகள், அன்றடைந்த அனுபவங்கள் நினைவில் இருக் கின்றனவா? பிறந்தது முதல் ஐந்து வயது வரையிலுள்ள காலத்தையே குழந்தைப் பருவமென்று நான் இங்கே குறிப்பிடுகிறேன். யாருக்காவது ஏதாவது ஒன்று நினை விற்கு வருகிறதா? பாட்டி சொல்லியிருப்பாள்: "நீ சிறு பிள்ளையாக இருந்தபோது எத்தனையோ குறும்பு பண்ணு வாய்; அடுப்புக் கரியை எடுத்துக் கொண்டு சுவரெல்லாம் எழுதுவாய்; எதற்கெடுத்தாலும் கீழே விழுந்து புரண்டு அழுவாய்" என்றெல்லாம். அவற்றை நான் கேட்க வில்லை. உங்களுக்கே தெளிவாக ஏதாவது நினைப்பில் இருக்கிறதா?

இப்பொழுது நான் முன்கூட்டியே விடைசொன்னது சரியென்று தெரிந்துவிட்டதல்லவா? நூற்றுக்கு நூறு என் வாக்கு மெய்யாகும் என்பது உறுதி. எங்காவது பத்தா யிரத்தில் ஒருவர் வேண்டுமானால் சற்று வாதாட முன்

வரலாம். அவரையும், ''உங்கள் முதல் மூன்று ஆண்டு வாழ்க்கையில் சென்றுபோன நாட்களைப்பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?'' என்று கேட்டுவிட்டால், முடியாது என்று வாயடங்கி விடுவார். எனவே பொதுவாகப் பார்க்கப் போனால் ஒவ்வொருவருடைய முதல்ஐந்தாண்டு களில் அடைந்த அநுபவங்கள், எண்ணின எண்ணங்கள், உள்ளத்தில் பொங்கின உணர்ச்சிகள், எல்லாம் மறந்து போய்விடுகின்றன. குழந்தைப் பருவ வாழ்வு ஆழ்ந்த இருளில் முழுகிவிடுகிறது.

ஆனால் அந்தக் காலத்து வாழ்க்கை அநுபவங்களும், அவற்றால் ஏற்பட்ட உணர்ச்சிகளுமே ஒருவனுடைய பிற் கால வாழ்க்கையைப் பெரும்பாலும் திட்டப் படுத்து கின்றன. எந்தப் பருவம் மறந்துபோய் விடுகிறதோ அந் தப் பருவமே ஒவ்வொரு மனிதனையும் ஆக்குகிறது என்றால் அது பெரிதும் வியப்பாக இல்லையா? உலகத்திலே இன் னும் அற்புதங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அவற்றில் இது ஒன்று. 'ஒட்டிய இளமையில் ஒரைந்து நீங்கும்' என்றபடி அந்தக் குழந்தைப் பருவ வாழ்க்கையே அடியோடு மறந்து போய் விடுகிறது என்றாலும், அதுவே இறுதிவரையிலும் மறைந்து நின்று, எவ்வித மாறுதலுக் கும் எளிதில் இடங்கொடாமல் மனிதனை ஆட்டிக்கொண் டிருக்கிறது. அன்று அமைந்த தன்மைகளின் விளைவே வாழ்க்கையாக முடிகிறது.

ஒவ்வொருவனுக்கும் பிறப்பினாலேயே சில தன்மை கள் அமைகின்றன. இவை அவனுடைய பாரம்பரியம். வளர்ப்பினாலே சில தன்மைகள் அமைகின்றன. இவை அவனுடைய குழந்தைப் பருவ வாழ்க்கையைப் பொறுத் திருக்கின்றன. இவை அனைத்தும் ஒன்று சேருவதால் அவன் ஒரு தனிப்பட்ட மனிதனாகிவிடுகிறான்—இயந்தி

ரத்திலிருந்து ஒன்றுபோலப் புறப்படும் பொருளைப் போன்றல்ல; தனிப்பட்ட சிறப்பு பொருந்திய ஒரு தனி மனிதனாக.

மேலே சொன்ன பாரம்பரியத் தன்மைகளைப் பற்றி உளவியல் ஆராய்ச்சியாளர்களிடையே சிறிது கருத்து வேறுபாடு உண்டு. சிலர், "பிறவியால் எத்தன்மையும் வருவதில்லை; வளர்ப்பினால்தான் எல்லாம் அமைகின்றன" என்கிறார்கள். வேறு சிலர், "வளர்ப்பினால் தன்மைகள் அமைவதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் பிறவியிலேயே பல அமைகின்றன என்பதும் திண்ணம் என்கின்றனர்.

இவர்கள் வாதத்தின் முடிவு எப்படி இருந்தாலும் நமக்கு ஒருண்மை ஐயத்திற்கிடமில்லாமல் தெளிவாகிறது. வளர்ப்பினாலேயும் பல தன்மைகள் அமைகின்றன என்பது அது. இதை யாரும் மறுக்கவில்லை. எல்லோரும் ஒரு மனதாக இதை ஒப்புக் கொள்கிறார்கள்.

அவ்வாறு வளர்ப்பினால் ஏற்படும் தன்மைகள் எல்லாம் பெரும்பாலும் குழந்தைப் பருவத்திலேயே உருவாகி விடுகின்றன. ஆதலின் குழந்தைப் பருவமே ஒருவனுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதியென ஏற்படுகிறது. அதில் எவ்வாறு உள்ளப்போக்கு அமைகிறதோ அதன்படியே பிற்கால வாழ்வு உருவெடுக்கிறது. அதன் முக்கியத்தைப் பற்றிப் பெரிய பெரிய உளவியலறிஞர்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

மறைமனத்தைப் (Unconscious mind) பற்றி முதல்முதலில் ஆராய்ச்சி செய்து, உலகத்தில் பல வாக்குப் பூசல்களுக்கு இடமாக, தம் புதிய கருத்துக்களை வெளியிட்டவர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud) என்பவர். அவருடைய கருத்துக்களில் பல இன்று ஏற்றுக்

கொள்ளப்பட்டு உளவியலிலேயே ஒரு புதுக் கிளை தோன்றியிருக்கிறது. அவர், "நான்கு அல்லது ஐந்தாம் ஆண்டிற்குள்ளேயே மனிதனுடைய முழு அமைப்பும் பெரும்பாலும் முடிந்துவிடுகிறது" என்ருர். தாழ்மை உணர்ச்சி (Inferiority Complex) என்ற பின்னலிலே மனிதனின் வாழ்க்கை கட்டுண்டு கிடக்கிறது என்று கருதும் ஆட்லரும் (Adler), "குழந்தைப் பருவம் பெரும்பாலும் வாழ்க்கைத் திட்டத்தை அறுதியிட்டு விடுகிறது" என்று சொல்லுகிருர். இவர்களைப் போலவே மற்ற உள ஆராய்ச்சி வல்லுநர்களும் இப்பருவத்தை முக்கியமானதென்று எண்ணுகிருர்கள்.

பள்ளிக்கு வருமுன் குழந்தையின் உளவளர்ச்சி எந்த எல்லை வரை நடைபெறுகிறது என்பதை விரிவாக ஆராய்ந்த கெஸல் (Gesel) என்பார், "உடல், உள அமைப்பின் போக்கு இந்தப் பருவத்திலேயே முடிவு கட்டப்பட்டு விடுகிறது" என்கிருர். "ஐந்து ஆண்டுகளுக்கு உட்பட்ட காலமே உடல், உள வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றதாகையால் அதுவே மிக முக்கியமானது" என்று ஸர் ஜார்ஜ் நியூமன் வெளியிட்டுள்ளார்.

பிற்காலத்திலே இந்தப் பருவத்தைப்பற்றிய நினைவு நமக்கு இல்லையென்ருலும், இதுவே நமது வாழ்க்கையை அமைக்கிறது என்பதை மேலே எடுத்துக் காட்டிய உளவியல் அறிஞர்களைப் போன்ற பலரின் வாக்கிலிருந்து உணரலாம். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்ற நம் நாட்டுப் பழமொழியும் இதே கருத்தைத்தான் ஒருவாறு குறிப்பாகப் பேசுகிறது. அப்பொழுது ஏற்பட்ட மனப்போக்கைப் பின்னல் வேறு திசையில் மாற்றி அமைப்பதென்பது பெரும்பாலும் இயலாத செயலாகும்.

ஆதலினாலே அந்தப் பருவத்தில் குழந்தையின் வளர்ப்பு மிக நல்ல முறையில் இருக்க வேண்டும். தாயும் தந்தையும் அதன் முக்கியத்தைத் தெளிவாக உள்ளத்தில் வைத்துக்கொண்டு குழந்தையைப் பேண வேண்டும்.

"அன்னை ஜீஜாபாய் சிவாஜிக்கு அச்ச உணர்ச்சியே தோன்றாதவாறு வளர்த்தாள்; இராமன் போன்ற வீரர்களின் வரலாறுகளைச் சொன்னாள்" என்று நாம் படித்திருக்கிறோம். அவள் சிவாஜியைச் சிறந்த வீரனாக்கு வதற்குக் காரணமாக இருந்திருக்கிறாள். இன்று பல தாய் மார்கள் குழந்தையைத் தொட்டிலில் இருக்கும்போதே பூச்சாண்டி காட்டிப் பயங்கொள்ளியாகச் செய்து விடுகின்றனர்.

உலகத்தில் அரிய செயல்களைக் குழந்தை செய்து வெற்றி பெற வேண்டுமானால் அச்சமறியாமல் வளர வேண்டும். இயல்பாக உண்டாகும் அச்ச உணர்ச்சியும் தேய்ந்து மறைந்து விடுமாறு நாம் உதவ வேண்டும். குழந்தையின் மனம் முழுமையாக மலருவதற்கு அன்பும் சுதந்திரமும் வேண்டும். குழந்தையை மிரட்டுவதோ அடிப்பதோ அடியோடு தொலைய வேண்டும். பல தடை களும் கட்டுப்பாடுகளும் உள்ள இடத்தில் குழந்தையின் உள்ளம் கோளாறுகளுக்கு உட்படுகிறது.

பெற்றோர்களும், குழந்தையுடன் நெருங்கிப் பழகும் உறவினர்களும் வேலைக்காரர்களும் மற்றவர்களும் தங்கள் அறியாமையினால் குழந்தையின் உள்ளத்தில் பல குழப் பங்களை உண்டாக்குவதற்குத் துணை செய்பவர்களாக இருக்கிறார்கள். அவை மறையுள்ளப் பகுதியில் பதிந்து வாழ்க்கையையே பாதிக்கின்றன என்று மறைமனத்தைப் பற்றி ஆராயும் அறிஞர்கள் இன்று ஐயமறக் காட்டு கிறார்கள்.

தாய்க்கு இயல்பாகவே குழந்தையை வளர்ப்பதற்கு வேண்டிய பல உண்மைகள் தெரிகின்றன. ஆனால் அவற்றோடு அவள் மனநிறைவு பெற்று விடக்கூடாது. ஆராய்ச்சியாளர்கள் இதுவரையில் கண்ட உண்மைகளை யும் அவள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தந்தையும் இதில் ஒருமனதாக ஒத்துழைக்க வேண்டும்.

குழந்தையிடம் பெற்றோர்களுக்கு நிறைந்த அன்பு இருப்பது இயல்பு. அதனால் குழந்தையை வளர்க்க அவர்கள் பல திட்டங்கள் வகுக்கிறார்கள். ஆனால் திட் டங்களைவிட அவர்கள் வாழ்க்கை நடத்தும் விதமே மிக முக்கியமானது. அவர்கள் நடத்தையே திட்டங்களைவிட மிகுதியாகக் குழந்தையின் உள்ளத்தில் பதிகிறது.

மேலும் குழந்தையின் சூழ்நிலை அதன் வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். பெற்றோரின் நடத்தை யுடன் சூழ்நிலையும் சேர்ந்து குழந்தையின் இள உள்ளத் தில் பெரிதும் ஆழ்ந்து பதிந்து பல உணர்ச்சிகளை உண் டாக்குகின்றன. அவற்றின் பயனாகப் பல தன்மைகள் அமைகின்றன. "சுற்றுப்புறம் எவ்வாறு காசநோயை உண்டாக்கக் காரணமாக இருக்கிறதோ அதுபோலச் சூழ்நிலை மன அமைப்புக்குக் காரணமாகிறது" என்று டாக்டர் சில்வர்மன் (Dr. Silverman) சொல்கிறார்.

ஆகையால் குழந்தைப் பருவம் மறந்து போவ தானாலும் அதன் அநுபவமே வாழ்க்கையின் போக்கை நிறுவுவதால் அது மிக முக்கியமான இடம் பெறுகிறது. அதை உணர்ந்து குழந்தைகளை வளர்க்கவேண்டும். வருங் கால உலகத்தை அமைக்கும் மக்களின் வெற்றியும் தோல் வியும் இன்று குழந்தைகளை வளர்க்கும் நம் கையிலேயே இருக்கின்றன.

# கார்த்திகைப் பிறை

ஐந்து ஆண்டுகள் சென்றபின் இன்றுதான் மறுபடியும் கார்த்திகைப் பிறையைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதைக் காண்பதே அவ்வளவு அருமை. 'கார்த்திகைப் பிறையைக் கண்டது போல' என்ற பழமொழியும் அதனாலேயே தோன்றியிருக்கின்றது.

கார்த்திகைத் திங்கள் மழைக்காலமல்லவா? வானத்திலே எப்பொழுதும் கரு மேகங்கள் கவிந்திருக்கும். மழை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சளசளவென்று பெய்யத் தொடங்கிவிடும். பகலவனைக் காண்பதே பல நாட்களில் இயலாது. பிறகு மெல்லிய மின்னற்கொடி போன்ற மூன்றாம் பிறையைக் காண்பது எப்படி?

இவ்வாண்டு நான் தனிப்பட்ட வாய்ப்பைப் பெற்றிருக்க வேண்டும். இல்லையேல் நேற்றுவரை, ஏன், சென்ற இரவிலும் இன்று காலையிலுங்கூட ஒரே அடைப்பும் தூறலுமாக இருந்த வானம் இவ்வாறு மாறிவிடுமா? பகல் ஒரு மணிக்கே கதிரவனின் பொற்கிரணங்கள் பூமியில் எங்கும் படிந்து புதுமையாக வீற்றிருந்தன. நீல வெளியிலே சிற்சில இடங்களில்தான் மேகக் குவியல்கள் மிதந்தன. அவற்றின் மையப்பகுதிகள் இருண்டிருந்தாலும் விளிம்புகள் வெண் சுதை போன்று ஒளிவிட்டன. அந்த மேகங்கள் வானத்தை அணிசெய்யும் அழகை எப்படி எடுத்துரைப்பது! நொடிக்கு நொடி மாறி மாறிப் புதிய புதிய ஓவியங்களையும், தோற்றங்களையும் படைக்கும் விந்தையை வருணிப்பது எளிதல்ல.

எப்பொழுதுமே மழையில் மூழ்கியிருந்த உலகம் உச்சி வேளைக்குப் பிறகு சூரியனின் பொற்கதிர்களை நன்கு துய்த்துக் கொண்டிருந்தது.

அந்தி வேளைக்கு முன்பே இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கப் புறப்பட்ட நான் நடந்து கொண்டே இருந்தேன். செங்கதிர்ச் செல்வன் மெல்ல மெல்லக் கீழிறங்கி மேற்கு மலைத் தொடருக்குப் பின்னே மறைய லானான். மேல்வானில் எங்கோ மெல்லிதாக மஞ்சு படர்ந்திருந்தது. ஆகா! அதற்குள்ளே புகுந்து பொற் கதிர்கள் செய்கின்ற வண்ணக்களியாட்ட நடனங்களை என்னென்பது! கிளிப் பச்சை, தாமிரச் சிவப்பு, பசு மஞ்சள். அடடா! கீழ் வானத்திலோ செம்பஞ்சை வில்லிட்டுத் தட்டிப் பட்டை செய்வதற்குக் குவித்து வைத்ததுபோலச் செந்நிற மேகங்கள். அவற்றின் செம்மை தரையிலும் பிரதிபலித்து எங்கும் ஒரு மோகனக் காட்சியை உண்டு பண்ணிற்று.

மறுபடியும் மேல்புறம் திரும்பினேன். அங்கே வான வெளியில் பதிந்திருந்தபளிங்குப்பாறையை இப்பொழுது காணோம். அதற்குப் பதிலாகச் செஞ்சோதிக் குதிரை ஒன்று பின்னங்கால்கள் இரண்டையும் ஊன்றி எட்டித் தாண்டுவது போல ஒரு மேகம் காணப்படுகிறது.

காணப்படுகிறதென்றா சொன்னேன்? இப்பொழுது அதையும் காணோம். வேறு ஏதோ ஓர் உருவம்! விநாடிக்கு விநாடி, நொடிக்கு நொடி புதிய தோற்றங் கள்; புதிய அழகுகள்; புதிய காட்சிகள்.

இருள் மெதுவாகக் கீழ்த் தொடுவானத்திலிருந்து மேலே பரவுகிறது; ஒளி கொஞ்சங் கொஞ்சமாகப் பின் வாங்குகிறது. அந்த இருள்-ஒளிப் போராட்டத்தைக்

கூர்ந்து கவனித்துக்கொண்டே நின்றேன். வெள்ளி மீன் பளிச்சென்று வெளி வந்தது.

நிலா அரசி வருவதற்கு வெள்ளி விளக்கு எடுத்தாய் விட்டது, தனியாகச் சுடர்விடும் அந்த மீனின் உள்ளங் கவர் ஆற்றலில் கட்டுண்டு உலகம் பிறைமகளை எதிர்பார்த் திருக்கின்றது.

அதோ வந்துவிட்டாள் மின்னற் கொடி! மெல்லிய ஒரு பொன் வளைவு!

பிஞ்சு மதியே, நீ இத்தனை அழகுடன் இருந்தால் யார்தாம் உன்னை நெற்றியில் அணிந்து கொள்ள மாட்டார்கள்? சுடலையாடியாகிய அந்தப் பித்தனுக்கும் உன்மீது பித்து ஏற்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

நீ என்ன உண்மைப் பொருளா? அல்லது அழகுத் தேவதையின் இளஞ்சிரிப்புதான் இவ்வாறு வானில் தோன்றுகின்றதா?

கிழக்கு வானம் நன்கு இருண்டு விட்டது. அங்குச் செவ்வொளி பெற்றிருந்த மேகமெல்லாம் பொறாமை யால் இருண்ட உள்ளம் போல இப்பொழுது களையிழந்து கிடக்கின்றன.

எனது நாட்டம் நிலவின் மென்கீற்றின் மீதே திரும் பியது. பிஞ்சு மதி, பிறைக் கீற்று; இல்லை இல்லை, இனி வரப் போகும் வசந்தத்திற்கு மன்மதன் புதிதாகச் செய்து கொண்ட பொன் வில்.

தொலைவில் தெரியும் மரங்களெல்லாம் கருங் குவியல்கள் போலத் தோன்றுகின்றன. அவைகளெல்லாம் இருளின் படை வீடுகளோ? அங்கிருந்துதான் உல

கத்தையே வளைத்துக்கொள்ளப் படை யெடுப்பு நடக்குமோ? தென்னைமரங்கள் இருளின் கொடிமரங்களாய் விட்டன.

பிறைமகளுக்கு இப்பொழுது முன்னைவிட மிகுதியான ஒளி வந்து விட்டது. மேற்கு மலைத் தொடர் அந்தச் சுடர் வளைவைப் பார்த்துப் பார்த்து நிமிர்ந்து படுத்திருக்கிறது. தன்னிடம் பிறைமதியாள் வரவேண்டுமென்று தவங்கிடக்கின்றது.

அதன் கரு நீல மேனியிலே அந்த மின்னல் துண்டு ஒரு கணம் தங்குகிறது. ஆகா, திருமாலின் மார்பிலே களித்து மறைகின்றாள் திருமகள்!

நான் அந்தக் காட்சியை இன்று கண்டுகொண்டேன்.

# குறட்டை

ஒரு பெரிய செல்வர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்று நான் மிகப் பெரிய சச்சரவுக்குள்ளானேன் என்று சொன்னால் நீங்கள் யாரும் எளிதில் நம்ப மாட்டீர்கள். 'திருமணம் என்றாலே குதூகலமான நிகழ்ச்சி அல்லவா? அதிலும் பணம் படைத்தவர் நடத்தும் திருமணத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?' என்று இப்படிக் கேள்விகள் உடனே உங்கள் உள்ளத்தில் உதய மாகி விடும். மெய்தான். அந்தத் திருமண வைபவத்திலும் குதூகலத்திற்குக் குறைவே கிடையாது. எதிர் பார்த்ததற்கும் அதிகமாக இருந்ததென்றுதான் சொல்ல வேண்டும். நள பாகத்தை எளிதில் தோற்கடிக்கும் அறு சுவை உண்டிகள், முதல்தர இசைவாணர்களின் இசை யரங்குகள், பரத நாட்டியம், கும்பகோணத்துக் கொழுந்து வெற்றிலை, நெய்யில் வறுத்தெடுத்த களிப் பாக்கு என்று இப்படி நாளெல்லாம், ஏன் இரவு பதினொரு மணி வரையில், மாறி மாறிக் கிடைத்துக் கொண்டே இருந்தன. எங்கே பார்த்தாலும் விருந்தைப் பற்றியே பேச்சு; அது முடிந்தால் இசை விருந்துப் பேச்சு; பரத நாட்டியப் பேச்சு; 'ஆஹா! மிக நல்ல ஏற்பாடு; முதல்தர ஏற்பாடு' என்று வெற்றிலையை மடித்து வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டே அனைவரும் உரையாடிக் கொண் டிருந்தார்கள்.

இத்தனை கோலாகலங்கள் இருந்ததால்தான் அன்று இரவு நான் மிகவும் தொல்லைப்பட வேண்டியதாய் விட்டது. பகலெல்லாம் ஒரே களியாட்டம். கண்ணுக்கு

விருந்து, செவிக்கு விருந்து, இவை தப்பினால் வயிற்றுக்கு விருந்து என்றிருந்தால் உள்ளத்திலே கவலைக்கு இட மிருக்க முடியுமா? நான் அன்று உறங்கப் போகும் வரையில் இன்ப லோகத்திலே மிதந்து கொண்டிருந்தேன். அதனால் திருமண அமர்க்களமெல்லாம் முடிந்த பிறகு இரவு பதினொரு மணிக்கு எனக்கு என்றும் இல்லாத அளவில் உறக்கம் தள்ளிக்கொண்டு வந்தது.

வந்திருந்தவர்களுக்கெல்லாம் படுக்க வசதியாக ஏற்பாடு செய்திருந்தார்கள். கூடம் முழுவதும் ஒழுங்காக மெத்தைகள் விரிக்கப்பட்டிருந்தன. நான் அப்படியே ஒரு பட்டுத் தலையணையின்மேல் சாய்ந்தேன். அன்றைய நிகழ்ச்சிகளெல்லாம் ஓர் இன்பப் படக்காட்சி போல மனத்தின் முன் தோன்றித் தூக்க மயக்கத்தோடு கலந்து எனக்கு ஆழ்ந்த அமைதியை அளிக்கலாயின.

அந்த நொடியில்தான் என் துன்பம் தொடங்கலாயிற்று.

எனக்குப் பின்புறத்திலிருந்து எருமைக் கடா பெருமூச்சு விடுவதுபோல ஒரு இரைச்சல் கேட்டது. உறுமுவது போலும் குரல் வந்தது. எனக்கு ஐயம் கிளம்பிற்று. யாராவது எருமையையோ அல்லது பன்றியையோ கொண்டு வந்து இப்படி வேடிக்கை செய்யத் தொடங்கி விட்டார்களா என்று முதலில் நினைத்தேன். ஆனால் சற்று நேரத்தில் உண்மை வெளியாயிற்று. அந்த இரைச்சல் எனக்குப் பக்கத்திலே ஒரு வெண்பட்டு மெத்தையிலே சயனித்திருந்த பேர்வழியின் மூக்கிலோ அல்லது குரல் வளையிலோ எங்கேதானென்று திட்டமாய்க் கூறமுடியாதபடி முரைச்சலிட்டுக் கொண்டு புறப்படுகிறதென்று தெரிய வந்தது.

அது போன்ற முரைச்சலை நான் அதுவரையில் கேட்டதில்லை. மனிதனால் அது போன்ற ஒலி அலைகளை உண்டாக்க முடியுமா என்று எனக்கு இன்னும் ஐயமாகவே இருக்கின்றது. இத்தனை பெரிய மனிதன் குழந்தைகளுக்கு அச்சங் காட்டுவதுபோல ஏன் இப்படி என்னிடம் வந்து நடு இரவிலே 'கொர்முர்' என்று உறுமுகிறான் என்று திரும்பிப் பார்த்தேன். அந்த வேளையில் என் உள்ளத்திலே கொடுஞ்சினம் கொதித்துக் கொண்டிருந்தது. அந்த ஆள் மட்டும் நான் எண்ணியபடி குறும்பு பண்ணிக் கொண்டிருந்தானானால் என்ன செய்திருப்பேனோ சொல்ல முடியாது. ஆனால் அந்த மனிதனோ வாயைத் திறந்துகொண்டு ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறான்!

அத்தனை கொர்முர் ரிலும் உறங்குகிறானே மனிதன்! அந்த ஆன்மாவின் திறமையைக் கண்டு எனக்கு வந்த கோபமெல்லாம் எங்கேயோ மறைந்துவிட்டது; ஒரு வியப்புணர்ச்சிதான் உள்ளத்திலே நிறைந்து நின்றது. உண்மையில் அவன் கும்பகர்ணஜித்தாகத்தான் இருக்க வேண்டுமென்று நான் முடிவு கட்டினேன்.

இங்ஙனம் சிறிது நேரம் அவனை உள்ளூறப் பாராட்டி விட்டுக் கண்ணை இறுக மூடிக் கொண்டு படுத்தேன்; கையை வைத்துக் காதுகளையும் அடைத்துக்கொண்டேன். என்ன செய்தும் எப்படியோ அந்த உறுமல் எனக்குள்ளே புகுந்து மூளையில் தாக்கிக் கொண்டே இருந்தது.

உறுமலென்றாலும் ஒரே வகையாக வந்து கொண்டிருந்தால் கேட்பவருக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும். நொடிக்கு நொடி நினைக்க முடியாத வெவ்வேறு ஒலி வடிவத்தில் வெளிப்பட்டால் யாரால்தான் அதைப் பொறுத்துக்கொள்ள முடியும்?

குர் ரீ ரீ ரீ......என்று ஆரோகணம்; இஸ் ரீ...இ...ஸ் ஸ் ஸ்...அஹ் ஹ என்று இப்படி அவரோகணம். மறு கணத்திலே கரியால் ஓடும் பஸ் போல டப டப என்று கிளம்பி டபக்கென்று நின்று விடுகிறது. பிறகு திடீரென்று திருப்பதி ஆண்டவன் கோயில் குரங்கு போல உர் என்று தொடங்குகிறது. உச்ச ஸ்தாயிக்குச் சென்று பலூன் வெடிக்கிறது போல ஓலமிட்டு அடங்கி விடுகிறது.

இப்படி அடங்கும்போதுதான் வேதனை பொறுக்க முடிவதில்லை. அடுத்த விநாடியில் என்ன புதிய அரக்க வடிவிலே புறப்படப் போகிறதோ என்று அஞ்சி உள்ளம் வெடித்துப் போவது போல அடித்துக் கொள்ளுகிறது.

என்னால் கொஞ்சமும் பொறுக்க முடியவில்லை. இவர் போன்ற ஆட்களை எதற்காகத் திருமணத்திற்கு அழைக்கிறார்கள் என்று மாப்பிள்ளை, பெண் வீட்டார்களைச் சீறி வைது கொண்டிருந்தேன். அதனால் ஒரு பயனும் ஏற்படவில்லை.

பிறகு சற்று உரத்த குரலில் 'ஏன் காணும் இப்படி உறுமுகிறீர்?' என்று சொன்னேன். அத்தனை நாத பேதங்களுக்கும் ஈடு கொடுக்கிற பேர் வழி எனது முணவலுக்கா செவிசாய்க்கப் போகிறார்? இது கூடத் தெரியவில்லையே என்று என்னை நானே கடிந்துகொண்டேன்.

அந்த வேளையிலே மனதை அடக்கும் ஆற்றலைப் பற்றி நினைவு வந்தது. யோகிகள் தங்கள் மனதை அடக்கி உலகத்தையே மறந்து விடுவதைப்பற்றி எண்ணிப் பார்த்தேன். உள்ளத்தை ஏதாவதொன்றில் ஆழ்ந்து ஈடுபடச் செய்துவிட்டால் அருகில் என்ன நடந்தாலும் தெரியாதென்று சொல்லுகிறார்கள். இடி

முழக்கங்களும் செவியில் பாயாது என்கிறார்கள். யாரோ ஒரு தத்துவ ஞானிக்குப் பகைவர் நகரிற் புகுந்து சூறையாடியதுகூடத் தெரியவில்லையாம். வால்மீகருக்குத் தம்மைச் சுற்றிப் புற்று வளர்ந்து மூடியதே புலனாகவில்லையாம்.

ஆமாம், அவையெல்லாம் மெய்யென்றாலும் என்னுடைய மனம் அப்படி அடங்கவேணுமே! அவர் அப்படிச் செய்தார், இவர் இப்படிச் செய்தார் என்று பேசி என்ன பயன்?

அந்த மனிதனை எழுப்பி அமைதியாக விளக்கிச் சொன்னால் என்ன என்று ஒரு எண்ணம் உதயமாயிற்று. ஆமாம், அதுதான் நல்லது என்று அவரை எழுப்பலானேன். ''ஐயா; உங்களைத்தானையா, ஏன் இப்படிக் குறட்டையிட்டு மற்றவர் தூக்கத்தைக் குலைக்கிறீர்?'' என்றேன்.

அவர் மெதுவாக விழித்து எழுந்து உட்கார்ந்தார். கண்ணைப் பிசைந்து விட்டுப் பார்த்தார். வாய் கிழிந்து போகுமோ என்னவோ என்று அஞ்சும்படியாக அண்ணாந்து ஆ...ஹ்ற...என்று ஒரு நீண்ட கொட்டாவியும் விட்டார். பிறகுதான் அவர் மூளைக்கு எனது கேள்வி எட்டியிருக்கும் போலிருக்கிறது, ''என்ன?'' என்று பதில் வினா எழுப்பினார். ''ஏனையா இப்படிக் குறட்டையிட்டுத் தொந்தரவு செய்கிறீர்?'' என்று இரங்கிய குரலில் கேட்டேன்.

''நானா குறட்டை போடுகிறேன்? சும்மா தூங்கிக் கொண்டிருப்பவனை எழுப்பி நடு ராத்திரியிலே ஏன் வாயைப் பிடுங்குகிறீர்? கல்யாண விருந்து ஆட்டி வைக்கிறதாக்கும்'' என்று பேசிவிட்டு மறுபுறம் திரும்பி

உடனே படுத்துவிட்டார். நான் திகைத்துப் போனேன்; என்ன பதில் கூறுவது என்று தோன்றவில்லை. குறட்டை போடுகிறவர்களுக்குத் தாங்கள் செய்யும் சப்த ஜாலங்களைப் பற்றித் தெரிகிறதே இல்லை; பிறர் சொன்னாலும் அவர்கள் நம்பமாட்டார்கள் என்று எனக்குத் தோன்றிற்று.

அதனால் அவருடன் வாதாடுவதைவிட அவர் உறங்கு முன்பே நானும் உறங்கிவிட்டால் ஒருவாறு தொல்லை தீர்ந்து விடும் என்று எண்ணி மறு பேச்சுப் பேசாமல் சாய்ந்தேன். ஆனால் அந்த மகானுபாவன் படுத்ததும் நான்கு மூச்சுத்தான் நேராக வந்தன. மறுபடியும் பழையபடி குறட்டை தொடங்கிவிட்டது.

அவரை மேலும் எழுப்புவதில் ஒரு பயனும் ஏற்படாது என்று தோன்றியதால் வேறு எங்காவது இடம் பார்த்துக் கொள்ளலாம் என்று கிளம்பினேன். ஒரே இருட்டு, எங்கே பார்த்தாலும் மனிதர்கள் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சார விளக்கைப் போடுவதற்கும் இடம் தெரியவில்லை. ஓர் இரண்டடி எடுத்து வைத்ததும் யாரோ ஒருவர் காலை மிதித்து விட்டேன். அதனால் அவர் என்னவோ முணுமுணுக்கத் தொடங்கி விட்டார். இனி எச்சரிக்கையோடு நடக்கவேண்டுமென்று அடிமேல் அடி வைத்துப் பம்பிப் பம்பி நகரத் தொடங்கினேன். அந்த நிலையில் யாரோ ஒருவர் விழித்துக் கொண்டார் போலிருக்கிறது. "டேய்! யாரது? ஏன் இப்படி இருட்டிலே பதுங்குகிறாய்? கலியாண வீட்டிலே முடிச்சவிழ்க்கவா?" என்று முழங்கத் தொடங்கினார்.

மற்றவர்களும் விழித்துக்கொண்டால் நிலைமை ஆபத்தாய்விடுமே என்று சட்டென்று மறுபடியும் பழைய

இடத்திற்கே வந்து படுத்துவிட்டேன். 'சரி, இன்று எனக்கு வேறு வழியில்லை. இங்கேயே கிடந்து பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்' என்று முடிவு செய்து கொண்டேன். ஓர் இரவுக்கே இந்தப் பெருந் தொல்லையென்றால் அந்த மனிதன் வீட்டிலே மனைவி மக்கள் ஆண்டு முந்நூற்றறுபது நாளும் இதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்களோ என்று அவர்கள்பால் பரிவு கொள்ளலானேன்.

எவ்வளவு நேரம் நான் அவர்களுடைய அவல நிலைமையைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தேனோ, தெரியாது. எப்படியோ அந்த எண்ணத்தோடேயே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன். மறுநாட் காலையில் யாரோ ஒருவர் அதட்டி அதட்டி எழுப்பியிராவிட்டால் எப்பொழுது விழித்திருப்பேனென்று திட்டமாகச் சொல்ல முடியாது. ''ஓய், யாரையா நீர்? மணி எட்டாகியும் இப்படிக் குறட்டை போட்டுக் கொண்டு தூங்குகிறீரே; எழுந்திரும்'' என்று அதட்டும் குரல் காதில் புகுந்து என்னைத் திடுக்கிடச் செய்தது. எழுந்து சுற்று முற்றும் பார்த்தேன். அப்பொழுது உறங்கிக்கொண்டிருந்தவன் நான் ஒருவன்தான்!

# சாவில்லை

'நான் மனிதனுக்கு மரணமில்லை என்கிறேன்' என்று மிடுக்கோடு கூறிக்கொண்டே எழுந்து நின்றார் பாரதியார். ஈரோட்டிற்கு அருகிலுள்ள கருங்கல் பாளையத்திலே நடந்த நிகழ்ச்சி. அங்கேயுள்ள நூல் நிலையத்தின் ஆண்டுவிழாவிலே அவர் செய்த கர்ஜனையின் முதல் எடுப்பு இது. சொற்பொழிவைத் தொடங்கும் வரையில் பாரதியார் சிலை போல மேடையிலே அமர்ந்தார். அசைவில்லை; பேச்சில்லை; கண் இமைப்பில்லை. அப்படி இருந்தவர் தடாலென்று எழுந்து நின்றார். மேலே சொன்னபடி வார்த்தை சொல்லலானார். பேச்சிலே அச்சமில்லை, கலக்கமில்லை; ஐயத்தை மருந்துக்குக் கூடக் காணோம். யமனை அப்பொழுதுதான் வீழ்த்தி விட்டு நின்ற பரமேசுவரன் பேசுவது போலப் பேசினார். கூடியிருந்த அத்தனை மக்கள் உள்ளத்திலும் இனிச் சாவில்லை என்ற நம்பிக்கை அந்த நொடியிலே உதயமாகி நின்றது.

ஆனால் அவ்வாறு இடிமுழக்கம் செய்து விட்டுச் சென்னைக்குத் திரும்பிய பாரதியார் ஒரு திங்கள் கூட உடல் சுமந்திருக்கவில்லை. அவர் கருங்கல்பாளையத்திற்கு வந்தது 1921 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில்; அடுத்த செப்டம்பர் 11 ஆம் தேதி அவர் உடல் சாம்பலாயிற்று.

*காலா, உனைநான் சிறுபுல்லென*
*மதிக்கிறேன்; என்றன்*
*காலருகே வாடா! சற்றே உனை*
*மிதிக்கிறேன்*

என்ற அவருடைய பாட்டு மட்டும் எல்லோருடைய காதிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அருணகிரிநாதரின் வாக்கிலே மந்திர சக்தி உண்டு அவர் பாடுகிறார்:

தண்டாயுதமும் திரிசூலமும்விழத்
தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழ விடு
வேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் னவிரோத ஞானச்
சுடர்வடிவாள்
கண்டாய டா அந்த காவந்து
பார்சற்றென் கைக்கெட்டவே

என்று யமனை அறைகூவி அழைத்து மார் தட்டுகிறார்.

மரணப் பிரமாதம் நமக்கில்லை என்று பெருமிதமாக அரச தோரணையிலே அவர் உலகுக்கு அறிவித்தார். ஆனால் அவர் எங்கே?

நாமார்க்குங் குடியல்லோம்
நமனை அஞ்சோம்

என்றார் மற்றொரு தெய்வக் கவியான நாவுக்கரசர்.

அவரும் இறந்துதானே போனார் என்று ஒரு ஐயப் பிரியர் கேட்கிறார். சாவே இல்லையென்று பிதற்றிக் கொண்டிருந்த எத்தனையோ பேர் செத்துவிட்டார்கள்; சாவில்லை என்பதெல்லாம் வெறும் பேச்சு என்று மேலும் அவர் விளக்கவுரை செய்கிறார்.

ஐயம் மிகப் பொல்லாதது. எதிலும் அதற்கு நம்பிக்கை கிடையாது. ஆனால், அதனால் எத்தனையோ நன்மைகள் உண்டாகியிருக்கின்றன. ஐயமில்லாவிட்டால் அறிவு விளக்கம் இல்லை; முன்னேற்றம் இல்லை. அதன்

உதவியில்லாமல் விஞ்ஞானிகள், தத்துவ அறிஞர்கள், ஆராய்ச்சிக்காரர்கள், இத்தனை பெரிய பெரிய உண்மை களைக் கண்டிருக்க மாட்டார்கள்.

என்ன இருந்தாலும் ஐயத்திற்குக் கொஞ்சம் கண் மங்கல்தான். உண்மையை நேரே பார்க்க அதற்கு இய லாது. கண்ணாடிக் கூண்டிலுள்ள பொருளும் அதற்குப் புலப்படாது. இந்த நிலையிலே அது கண்ணை வேறு மூடிக் கொள்ளும். மூடிக்கொண்டு, தான் சொன்னதையே விடாது பிதற்றிக் கொண்டிருக்கும். கண்ணைத் திறந்து பார் என்றால், பார்க்க வேண்டிய தேவையில்லை. பார்க் காமலே எனக்குத் தெரியும் என்று ஓலமிடும்.

அந்த வேளையிலேதான் அதன் மேலே எனக்குப் பொல்லாத கோபம் பிறக்கும். அதன் மாலைக் கண்ணைத் தோண்டி எடுத்து விடலாமா என்று ஆத்திரம் உண் டாகும். இருந்தாலும் அதன் உதவிகளை எண்ணிப் பார்க்கும்போது அதைத் தண்டிக்க மனம் வராது. மேலும் இந்த ஐயம் நமது பயணத்திலே இறுதிக் கட்டம் வரையில் கூடவே வருகின்றது. கோபத்திலே அதைக் குருடாக்கி விட்டால் பிறகு வழி நடக்கும்போது தொல்லை நமக்குத்தானே?

இப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கும்போதுதான் ஐயத்தை ஒதுக்கித் தள்ளிவிடுவதையோ தண்டிப் பதையோ விட்டுவிட்டு அவ்வப்போது சமாதானம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. அந்த முறையிலே தான் சாவில்லை என்பதை நான் மெய்ப்பிக்க நினைக் கிறேன்.

பாரதியார், அப்பர், அருணகிரிநாதர் போன்ற பெரியவர்கள் சாவில்லை என்று சொன்னபோது அவர்கள் இந்த உடலைப்பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருக்க வில்லை. இந்த உடலோடு கூடிய வாழ்வு அற்ப மனித

னுக்குத்தான் சர்க்கரையும் வெல்லமும் போன்றது. மகான்களுக்கு இது பெரிதல்ல. உடம்பில்லாமலும் சாகாதிருக்கும் வாழ்க்கையையே அவர்கள் நாடினார்கள். சுவாமி ராமதீர்த்தர் ஒரு பெரிய ஞானி. ஒரு நாள் அவர் என்னவோ நினைத்துக் கொண்டார்; நேராகக் கங்கைக்குச் சென்றார். "டேய் யமனே, இந்த உடலை எடுத்துக்கொள். எனக்கு ஆயிரங்கோடி உடல்கள் இருக்கின்றன. இந்த ஒருடல் வேண்டியதில்லை, எடுத்துக் கொள்" என்று ஆற்றிலே பாய்ந்துவிட்டார்; ஆனால் அவர் சாகவில்லை.

அப்பர் முதலிய அடியார்களும், சிறந்த கவிகளும், கலைஞர்களும் அவரைப்போலத்தான் சாகாதிருக்கின்றனர். நைந்து போகும் இந்த உடலைத் தூக்கி எறிந்துவிட்டு அவர்கள் என்றும் இருக்கிறார்கள். ஏசுமுனியைச் சிலுவையில் அறைந்த மூடர்களுக்கு இந்த உண்மை தெரியாமையால்தான் அவர் இறந்து விட்டதாக மனப்பால் குடித்தார்கள்.

யமனுக்குக் கூற்றுவன் என்பது தமிழ்ப் பெயர். உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன், அதாவது பிரிப்பவன் என்பது பொருள் அவன் ஆற்றல் அதனுடன் நின்றுவிடுகிறது. அவனால் உடலையும் உயிரையும் பிரிக்க முடியுமே ஒழிய யாரையும் சாகும்படி செய்ய முடியாது. நமக்கு மட்டும் துணிவும் முயற்சியும் இருந்தால் ஆயிரம் ஆயிரம் அரிய செயல்களைச் செய்து சாகாதிருக்கலாம். ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செய்து என்றும் இருக்கும் நிலை எய்தலாம்; கலையும் கவிதையும் தீட்டிச் சிரஞ்சீவியாகலாம். மனிதன் உடம்பல்ல. மனிதன் ஆன்மா. அவன் இறைவனோடு ஒட்டிய ஒரு பகுதி. மனிதனுக்குச் சாவில்லை.

# எங்கள் வீடு

எத்தனை ஆர்வம், எத்தனை குதூகலம், எத்தனை பெருமையோடு நான் வீடு கட்டினேன்; என் மனைவியும் நானுமாக இந்த வீடு கட்டுவதைப்பற்றி எத்தனை ஆண்டுகள் எத்தனையெத்தனை இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்தோம்! 'எங்கள் வீடு' என்று உரிமையோடு சொல்லிக்கொள்ள நாங்கள் எத்தனை காலம் துடித்துக்கொண்டிருந்தோம்; இறுதியாக எப்படியோ அந்தக் கனவுகள் நனவாகிவிட்டது. ஒரு வீடு எங்களுக்கே உரியது என்று ஏற்பட்டுவிட்டது. நாங்கள் அதிற் குடிபுகும் நன்னாளை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

ஆனால் நாங்கள் புதுமனை புகுவிழாவை நடத்துவதற்கு முன்பே இரண்டு சிட்டுக்குருவிகள் ஆணும் பெண்ணுமாக அந்த வீட்டில் குடிபுகுந்துவிட்டன. நல்ல நாள் ஒன்றும் அவை பார்த்ததாகத் தோன்றவில்லை. என்னுடைய எழுத்துவேலைக்காகத் திட்டமிருந்த அறையில் அவை வசதியாக இடம் பார்த்து அவற்றின் குஞ்சுகளுக்காக வெதுவெதுப்பான தனிப்பட்ட சிறிய வைக்கோல் மண்டபமும் ஏற்பாடு செய்துகொண்டன. வீட்டில் ஒவ்வொரு பாகமும் அவற்றிற்கே சொந்தம் என்ற மமதையோடு அவை வாழ்ந்துகொண்டிருந்தன.

ஆசையாக இருந்தாலும் என்னால் அவற்றைப் போலக் கதவின்மேல் ஏறி உட்கார முடியுமா? அல்லது மின்சார விசிறியின் அலகுகளின் மேலே ஒய்யாரமாக அமர்ந்து காற்று மெதுவாக வீசுகையில் ராட்டினம்

சுற்ற முடியுமா? அந்தக் குருவிகளுக்கு அந்த இடங்களெல்லாம் தனி உரிமையாக ஏற்பட்டுவிட்டன.

எனக்கு முதலில் அந்தக் குருவிகளைக் கண்டதும் கோபம் கோபமாக வந்தது. என்னுடைய வீட்டில் இவ்வாறு உரிமை கொண்டாட அவற்றிற்கு இத்தனை துணிச்சலா என்று சீறினேன். என் அனுமதியின்றி உள்ளே நுழையலாமா? பஞ்சுமெத்தையைச் சுருட்டி நான் கட்டிலிலே வைப்பேன். பெண் குருவி அந்த மெத்தையிலிருந்து உரிமையோடு தன் மூக்கால் கொத்தி, பஞ்செடுத்துத் தன் குஞ்சுகளுக்கு மெத்தை செய்யக் கொண்டுபோகும். வீட்டிற்கு முன்புறத்திலே அழகிய பூச்செடிகளை முன்னெச்சரிக்கையாகவே அவற்றை விற்கும் தோட்டத்திலிருந்து வாங்கிவந்து நட்டு வைத்திருந்தேன். அவற்றிற்குத் தண்ணீர் ஊற்றும்போதெல்லாம் அவை என்னுடைய செடிகள், அவை என் மனைவியின் கூந்தலை அணிசெய்ய வண்ணவண்ணமான மலர்களைக் கொடுக்கக் காத்திருக்கின்றன என்று நான் பூரிப்போடு எண்ணமிடுவேன். செடிகளுக்குப் பக்கத்திலே நல்ல வெண்மணலாக நான்கு வண்டிகளில் கொண்டு வந்து பரப்பி வைத்திருந்தேன். மாலை வேளைகளிலே அங்கே நானும் என் மனைவியும் இன்பமுடன் அமர்ந்து பேசி மகிழ்வதற்காக நான் செய்த முன்னேற்பாடு அது.

மாலைவேளையிலே பார்த்தால் அந்தக் குருவிகள் கொஞ்சமும் என்னைச் சட்டை செய்யாமல் ஒரு பூச்செடியின் மேலே அமர்ந்து கொள்ளும். ஒன்றோடொன்று விளையாடிக்கொண்டே ஒரு செடியிலிருந்து மற்றொன்றிற்கு ஓயிலாகத் தாவிச் செல்லும். பிறகு இரண்டும் கொஞ்சிக்கொண்டே வெண்மணலின் மீது பறந்துகுதித்து அமரும். பெட்டை மணலிலே படுத்து இறகுகளைக் கோதி மணல் விளையாடிக்கொண்டிருக்கும். அதைப்

பார்த்து மகிழ்ந்துகொண்டே ஆண் குருவி மணலில் மூழ்கி இறகுகளைச் சிலிர்த்து வீசும். பிறகு இரண்டும் சேர்ந்து இந்த மணற்கிரீடையில் உலகத்தையும், எதிரே கடுகடுத்த முகத்தோடு நிற்கும் என்னையும் மறந்து களித்திருக்கும்.

குஞ்சுகளுக்காக அவை அறையமைத்துக்கொண்டிருந்த பகுதியின் பக்கமாகச் சென்றுவிட்டால், இரண்டு குருவிகளும் ஆரவாரம் செய்து என்னை விரட்டப் பார்க்கும். சிட்டுக்குருவி எவ்வளவு பெரிய இரைச்சலை உண்டாக்கும் என்பதை அந்த வேளையில்தான் நன்றாக உணர்ந்தேன். என் சொந்த வீட்டிற்குள்ளே அனுமதி இல்லாமல் நுழைந்துகொண்டு என்னையே விரட்டப் பார்க்கும் குருவிகளிடத்திலே எனக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. அந்தக் குருவிகள் என் கைக்குள் மட்டும் அகப்பட்டிருந்தால் அவற்றை அப்படியே கசக்கிப் பிழிந்திருப்பேன்.

ஒருவனுடைய தனி உடைமை என்ற எண்ணத்திலே சொல்ல முடியாத ஒரு இன்பம் இருக்கிறது. அப்படிப்பட்ட இன்பத்தைத் துய்க்க ஆவலோடு வந்த என்னுடைய மன அமைதியை இந்தக் குருவிகள் குலைத்துவிட்டன. என்னுடைய உற்சாகமும், உள்ளக் கிளர்ச்சியும் மறைந்தன. சோர்வோடு நான் நேற்று மாலை கன்னத்தில் கை வைத்து என் படிப்பறையில் அமர்ந்திருந்தேன். அந்தக் குருவிகளை என்னால் மறக்க முடியவில்லை. அவைகள் இரண்டும் மாலை இளங்காற்றில் ஜிவ்வென்று தாவிப் பறப்பதும், வெண்மணலிலே படுத்து மூழ்கிக் களிப்பதுமாக இருந்தன. பிறகு திடீரென்று என் அறைக்குள்ளே புகுந்து தாமரை மொகைப்போல அழகாகத் தொங்கிய மின்சார விளக்கின் மேலே அமர்ந்துகொண்டு கொஞ்சத் தொடங்கின. என் உள்ளத்திலே

அனல் கொதித்தது. கோபம் கரைபுரண்டு வெளிப் பட்டது. நான் உயிராகப் போற்றும் திருக்குறள் என்றும் பாராமல் அந்நூலை எடுத்து அக்குருவிகளின் மேலே ஆவேசத்தோடு வீசினேன். குருவிகள் சட் சட் சட் சட் என்று இரைந்து வைது கொண்டே பறந்து விட்டன. தாமரை மொகை விளக்குப் பல சுக்குகளாக உடைந்து தரையிலே விழுந்தது. அந்த அரவம் கேட்டு என் மனைவி ஓடிவந்தாள். பெருந் தொகை கொடுத்து ஆர்வத்தோடு வாங்கிய அந்த விளக்கின் கதியைக் கண்டு அவள் சற்று நேரம் பேச்சிழந்து நின்றாள். பிறகு நடந் ததை ஒருவாறு அறிந்துகொண்டு, "நம்மிடத்திலே அடைக்கலம் புகுகின்ற சிட்டுக்குருவிகளை இப்படி விரட்ட லாமா, பாபமல்லவா?" என்று தயங்கித் தயங்கிக் கேட் டாள். "அடைக்கலாங் குருவிகளா அவை? அவைகள் தானே இந்த வீட்டிற்குச் சொந்தம்கொண்டாடுகின்றன? நாம்தான் இங்கே அடைக்கலம் புகுந்ததாக அவை களுக்கு எண்ணம்" என்று ஆத்திரத்தோடு முழங்கினேன். எனது எண்ணப்போக்கை அவள் அறிந்துகொள்ள வில்லை. உடைந்த விளக்குத் துண்டுகளை ஒன்றுசேர்த்து எடுத்தெறியும் பணியிலே அவள் ஈடுபட்டாள். நான் மௌனமாக அமர்ந்து நேரம் கழிவதையும் கவனியாமல் ஏதேதோ எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன்.

பொழுது சாய்ந்து இருள் பரவத் தொடங்கிற்று. அறையில் அடுத்த கோடியில் உடையாமலிருந்த மற்றொரு மின்சார விளக்கை ஏற்றவும் கருதாமல் நான் வீற்றிருந்தேன். என் எண்ணத்திலிருந்து அந்தக் குருவி களை அகற்ற முடியவில்லை. என் உள்ளத்திலே அவை ஒரு நீங்காத சுமையாகிவிட்டன. ஒரு பல்லி சுவரிலே ஒட்டிக்கொண்டு ஊர்ந்துவந்து வாயைச் சப்பி நச்சு நச் சென்று ஒலி எழுப்பிற்று. "உனக்கும் இந்த வீடு

சொந்தமோ?'' என்று அதைப் பார்த்து நான் கோபமாகப் பேசினேன். என் மனைவி அதைச் செவியுற்றுச் சிரித்துக்கொண்டே வந்தாள். ''அந்த மணலை எதற்காக அங்கே போட்டு வைத்திருக்கிறீர்கள்?'' என்று அவள் பொருள் நிறைந்த குறிப்போடு கேட்டுக் கொண்டே கதவருகில் சென்று நின்றாள். நான் மறுமொழி கூறாததைக் கண்டு அவள் மணல் திடலுக்குச் சென்று எண்ணமிட்டுக்கொண்டே அமர்ந்தாள்.

இந்த வீடு யாருக்குத்தான் சொந்தம்? குருவிகள் தங்களுடைய உடைமையென்று கருதிக் களிக்கின்றன. பல்லி சொந்தம் கொண்டாடுகிறது. இது என்னுடைய வீடல்லவா? இவைகளுக்கு என்ன திமிர்? இவ்வாறு நான் எண்ணக்கடலில் மூழ்கிக் கிடந்தேன்.

குடக்கூலி கொடுத்து நாங்கள் குடியிருந்த வீட்டிலும் இந்த உயிர்வகைகள் இல்லாமலில்லை. பாவம், அடைக்கலாங் குருவி கூடு கட்டி வாழட்டும் என்று நான் அன்று பரிவோடு எண்ணியிருந்தேன். ஆனால் உடைமை என்கின்ற எண்ணம் வந்தவுடன் என் போக்கே மாறி விட்டது. என் உள்ளத்திற்கு இயல்பான மகிழ்ச்சியும் மங்கிவிட்டது. உடைமை என்கின்ற எண்ணத்திற்கே மகிழ்ச்சியையும், மனநிறைவையும் போக்கடிக்கும் தன்மை உண்டோ? அந்த உடைமையைப் பறிகொடுக்காமல் காக்கவேண்டும் என்ற கவலை உள்ளத்தின் ஆழத்திலே பிறக்குமோ? என்றால் திட்டமாகச் சொல்ல முடியவில்லை.

நாம் சொந்தம் பாராட்டுகின்ற ஒவ்வொரு பொருளும் உண்மையிலே நமக்குச் சொந்தமில்லையா? வேதாந்திகள் கூறுவதுபோல உடைமை என்கின்ற எண்ணமே மாயையா? உடைமையென்பதெல்லாம் பொய்த் தோற்

றந்தாளு? என் உடம்பைப் பற்றியே எண்ணிப் பார்ப்போம். எத்தனை வகையான கிருமிகளும், புழு வகைகளும் இதைத் தங்கள் உடைமையென வாழ்ந்து வருகின்றன; "உன்னையே நீ எண்ணிப் பாரு இந்த உலகத்தில் எது சொந்தம் யோசித்துக் கூறு" என்று பாடியவன் இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் பாடினுனே?

"இந்த அந்தி மல்லிகையை வந்து பாருங்கள். நீங்கள் பார்த்து மகிழவேண்டுமென்று அது எத்தனை அழகாகப் பூத்துக் குலுங்கிக்கொண்டிருக்கின்றது; வந்து பாருங்கள்" என்று என் மனைவி அன்போடு அழைத்தாள். ஆமாம், அந்தச் செடி தன்னுடைய மலரின் குங்கும வண்ணப் பேரழகை யெல்லாம் தனக்குள்ளேயே மறைத்து வைத்துக்கொள்ளவில்லை. அதோ, அங்கே மலரத் தொடங்கியுள்ள முல்லைப்பூ தனக்கே உரித்தான தனி இன்ப நறுமணத்தை வேறு யாரும் பங்கிட்டுத் துய்க்கக்கூடாதென்று கருதவில்லை. இளங்காற்று உரிமையோடு அதனிடம் சென்று நறுமணத்தை வாரிக்கொண்டு வருகிறது. அந்த மலர் தன் வாழ்வு முழுதும் தனது உடைமையான தனிச் செல்வத்தை அள்ளி வழங்குகிறது. அதிலேதான் இன்பம் இருக்கிறதுபோலும். நறுமணத்தை முகந்துவந்த இளங்காற்றும் தானே அதை வைத்துக்கொள்ளவில்லை. அதை எங்கும் பரப்புகிறது. இந்த எண்ணம் உள்ளத்திலே அரும்புவிடத் தொடங்கியதும் என் போக்கே மாறலாயிற்று. மகிழ்ச்சியும் அமைதியும் எங்கிருந்தோ வந்து என் உள்ளத்திலே குடிகொண்டு புதிய உயிர் தழையச் செய்யலாயின. சிட்டுக்குருவிகள் வாழ்க என்று நான் ஆசிகூறத் தொடங்கினேன். என் மனைவியின் கண்களிலே ஒளிபடர்ந்து முகம் மலர்ந்தது. எனக்கு வீடு கிடைத்தது.

# நந்தா ஒளி

ஆமாம்; இதே மாமரந்தான். இதன் தண்ணிழலில் அமர்ந்து நீ உன் காதலியோடு நேற்று மாலை கொஞ்சிக் குலாவும்போதுதான் அவன் யமனாக வந்து சேர்ந்தான். நொடிப் பொழுதிலே, கண்ணெடுத்துப் பார்ப்பதற்கு முன்னாலே உன் காதலி துடித்து உயிரற்று விழுந்தாள். அந்தோ! எல்லாம் என் கண் முன்னாலேயே நடந்தது. இதே மரந்தான். இங்குதான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது. கொலை கொலை, மன்னிக்க முடியாத கொலை. காதல் செய்த பெண்மையின் உயிர்க் கொலை.

இன்று எதற்காக நீ மறுபடியும் இந்தக் கொலைக் களத்துக்கு வந்திருக்கிறாய்? உன் உயிரையும் வாங்கி விடட்டும் என்று வந்திருக்கிறாயா? அப்படித்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதே மாலை வேளையிலே இன்று நீ இந்த மரத்தையே நாடி வருவாயா?

நேற்று உனக்கு உன் உயிர் வெல்லம். இன்று அது உனக்கு எட்டிக்காய்; ஒரு பெருஞ்சுமை. அதைச் சுமக்க முடியாமல் தத்தளிக்கிறாயா?

நேற்று அந்தக் கூற்றுவனைக்கண்டுநடுங்கினாய். இன்று அவனை வரவேற்க வந்திருக்கிறாயா? அவனைத் தேடி அலைகிறாயா? அவன் கொலைக் கண்களிலே விழத்துடிக்கிறாயா?

ஒரு வேளை, உன் காதலி உனக்கு வேடிக்கை காட்ட உயிரற்றவள் போல் நேற்று நடித்திருப்பாள் என்று நம்பி, இன்று அவளைத் தேடி வந்திருக்கிறாயா? அவள்

எழுந்து உன்னைக் காணப் பறந்து வருவாள் என்று நம்புகிறாயா? ஐயோ! இந்த நம்பிக்கை என்னும் மாய மனப்பாங்கு எத்தனை ஆறுதல் அளிக்கிறது! எத்தனை ஏமாற்றமும் அளிக்கிறது! புரையோடிய புண்ணை எப்படியெல்லாம் மூடி மூடித் திறக்கிறது! இருந்தாலும் இந்த நம்பிக்கைதானே உயிருக்கு ஒரு தனிவலிமை?

நீ என் இனத்தினை இப்பொழுது முற்றிலும் வெறுத்துப் புழுங்கிக் கொண்டிருக்கிறாய். மனிதனைக் கல் மனப் பேய் என்று கூறுகிறாய். அன்பு என்னும் பசையே கண்டறியாத பாலைப்பதர் என்கிறாய். இன்னும் என்னவெல்லாம் சொல்லி ஏசுவாயோ ?

குயிலா! நீ எதற்காக இப்பொழுது இந்த மரத்துக்கு வந்தாய்? உன்னுடைய பாட்டெல்லாம் எங்கே? உன் காதலியோடு செத்துவிட்டதா? இந்த மரக்கிளைகளிலே என்ன தேடுகிறாய்? ஆவலோடு தத்தித் தத்தி ஒவ்வொரு கிளையாக ஏன் போகிறாய் ?

உங்கள் காதல் வாழ்க்கையின் காட்சிகளெல்லாம் இந்த மரத்தைக் கண்டவுடனே, உன் உள்ளத்திலே தோன்றுகின்றனவா? அந்தக் காட்சிகளின் நினைவிலே நீ களிப்படைகிறாயா? கசிந்து உருகுகிறாயா? அந்த நினைப்பு மேலும் மேலும் உனக்குத் துன்பந்தானே விளைக்கும் ? இந்த மரத்திலே நீ தங்கியிருந்து எத்தனை எத்தனை இன்பப் பாட்டைப் பொழிந்திருக்கிறாய்? அந்தப் பேதைக் குயிலியின் செவிகளிலே இன்பப் போதையை இங்கிருந்துதானே பாய்ச்சினாய்? உனது இன்னிசையில் மயங்கித்தானே குயிலி உன்னிடம் ஓடிவந்தாள்? உனது பாட்டே அவளுக்குக் கூற்றுவனின் தூதனாக மாறியதைக் கண்டு உனது குரலையே நீ வெறுக்கிறாயா?

இந்த மரக்கிளைகளில் அமர்ந்து எத்தனை நாட்கள் நீ என் உள்ளத்தில் நவ நவமான இன்பக் கிளர்ச்சிகளைப்

பொங்கச் செய்திருக்கிறாய்! உனது பாட்டொலியிலே உலகம் விண்ணவரின் இன்ப உலகமாக மாறியதை நான் கண்டிருக்கிறேன். உலகமே ஒரு இன்ப மோகினி யானதை உணர்ந்து மெய்மறந்திருக்கிறேன்.

இப்பொழுது எல்லாம் கனவாகப் போய்விட்டனவே! உன் குரல் இனி ஒலிக்காதா? உன் குரலில் மீண்டும் தேன் சுரக்காதா? அன்பு வறண்டுபோன பிறகு நீ பாடு வாயா? அழுகைப் பாட்டுக்கும் அப்பாற்பட்டதாக வல்லவோ உன்னுடைய அவலம் தோன்றுகிறது? அழு கையில் ஆறுதல் தோன்றுகிறது. உள்ளத்தில் உறைந்து கிடக்கும் துன்பத்தை ஒப்பாரி கண்ணீராகக் கரைத்து மெதுவாக வெளியேற்றுகிறது. உனது துன்பம் கரையக் கூடியதாக இல்லையே! பாடு, குயிலா! அவலப் பாட் டாவது பாடு. உன் நெஞ்சம் கொதிப்படங்கட்டும்.

என்னை ஏன் இப்படி உற்றுப் பார்க்கிறாய்? எனக்குச் சாபம் கொடுக்கிறாயா?

அந்த மூடனைத் தடுக்காதது என் குற்றந்தான். ஆனால் நான் அவனைத் திரும்பிப் பார்ப்பதற்கு முன்னு லேயே அவன் குறி வைத்துச் சுட்டு விட்டானே? துப் பாக்கி வெடியின் இடிக் குரல் கேட்ட பிறகுதானே நான் திடுக்கிட்டுத் திரும்பினேன்?

அந்தக் குண்டு தவறி என்மேல் பாய்ந்திருந்தால் நான் எப்படித் துடித்திருப்பேன்! அவனும் எப்படித் எப்படித் துடித்திருப்பான்! எனக்காக அவன் எத்தனை பரிவு காட்டியிருப்பான்!

நீயும் என்னைப் போல் ஓர் உயிர்தானே? என்னைவிட நீ மனித இனத்துக்கு மேலான இன்ப மூட்டுகிறாய். உனது பாடல் மனிதனை வானுலகத்துக்கு இழுத்துச் செல்லு கிறது. எனக்கு அத்தனை வன்மை ஏது?

குயிலா, வாழ்நாள் முழுதும் பாடுவது உனது இயல்பு. இசையால் உலகத்துக்கு இன்பம் தருகிறாய். இன்பம் செய்தல் உனது நெறி; உனது வாழ்க்கை.

மனிதன் இன்று எப்படி இருக்கிறான்? வாழ்க்கை முழுதும் இன்பமே செய்கிறானா? இன்பமே அவன் செய்ய வில்லை என்று கூற முடியாது. ஆனால் அதைவிடத் துன்பம் செய்வதே அவன் வாழ்க்கையில் முதலிடம் பெற்றிருக்கிறது என்பதை நான் மறுக்க முடியுமா? அவன் எட்டிப் பிடித்த வெற்றிகள் பல என்பது மெய்தான். இன்பம் பலவற்றிற்கு ஏணியிட்டதும் மெய்தான். ஆனால் அவன் அடைந்த வெற்றியின் சிகரம் ஹிரோஷிமாவாக வல்லவோ காட்சியளிக்கிறது? பாட்டிசைக்கும் உன் வாழ்க்கையோடு மனிதனுடைய வாழ்க்கையை ஒப்பிடுவது சரியல்ல. உன் வாழ்க்கை தேன். மனித வாழ்க்கை கலப்படமற்ற தேனல்ல; அதில் நஞ்சு கலந்திருக்கிறது.

கரியது உன் உடல்; ஆனால் உன் பாட்டு இனியது; அமுதம் சுரப்பது. கடவுளின் வடிவிலேயே மனிதன் தோன்றியிருக்கிறான் என்று கூறுகிறார்கள்; ஆனால் அந்த இறைவடிவத்திலே கரிய உள்ளம் புகுந்து கொண்டிருக்கிறது. அவன் உள்ளம் பேய்க் குகை. அதில் அறிவு மின்னல்கள் அவ்வப்போது பளிச்சிட்டாலும் அதன் இருட்டுப்படலம் இன்னும் விலகவில்லை.

இனிமையை வானிலே பரப்புவது உன்னுடைய முயற்சி அணுவின் நஞ்சை வானிலே பரப்புவது இன்று மனிதனுடைய உன்மத்த வெறியாக இருக்கிறது.

குயிலா, எங்களுக்காக நீ இரக்கப்பட வேண்டும். உனது தேனிசையை முழுக்க முழுக்க ஏற்று இன்புற்றுப் போற்றும் காலம் எங்களுக்கு வரும். அதன் முன்பு பல காலம் எங்கள் அறிவீனத்தினாலே நாங்களும் துன்புறு

வோம்; உங்களைப்போல் இன்பம் செய்கின்றவர்களையும் துன்புறுத்துவோம்; எங்கள் அறிவு முடமானது. உதை பட்டு அடிபட்டுத்தான் அது திருந்தும். எத்தனையோ சான்றோர்கள் எங்களுக்கு இன்பவாழ்வுபற்றி இன்னுரை வழங்கியிருக்கிறார்கள். அண்மையிலே எங்களிடையே அன்புருவமாக நடமாடிய காந்தியடிகள், அன்பு கொல்லாமை ஆகிய உயர் நெறிகளைப்பற்றி எங்களுக்கு எவ்வளவோ கூறியுள்ளார்.

நாங்கள் அவரைப்போன்ற சான்றோர்களைப்போற்றுவதில் தவறுவதில்லை; அவர்கள் கருணையால் கூறியமொழிகளைப் பின்பற்றுவதில் மட்டும் போதுமான ஊக்கம் எங்களுக்கு என்றும் நிலையாக இருப்பதில்லை. எங்கள் முடத்தன்மைக்கு அது சான்று. அதனால் நாங்கள் இடர்ப்படுகிறோம். உங்களையும் வதைக்கிறோம். பொறுத்துக்கொள். எங்களுக்கு நல்ல காலம், நல்ல அறிவு விரைவில் வரவேண்டுமென்று நீ பரிவுகொள். ஒரு பாட்டுப் பாடு. உனது தேன் இசை எங்கள் கருங்கல் மனத்தை மேலும் மேலும் கரையச் செய்யட்டும். பாட்டுச்கு இந்த வல்லமை உண்டு என்கிறார்கள். உன் பாட்டால் எங்கள் கொலையுள்ளமும் மென்மை அடைய வேண்டும்.

குயிலா, பாடு. 'உங்களை மன்னித்தேன்' என்று பாடு. அன்புக்கே இடமாக எங்கள் உள்ளம் மலர்வதற்கு உன் பாட்டுத் தேன் உதவ வேண்டும். குயிலா, பாடு. இன்னா செய்தார் நாணி மனமாற்றம் அடையப் பாடு.

'பழைய புன்மை இருள் இன்றே மறைக' என்று பாடு. 'புதிய இன்ப ஒளி, அன்பெனும் நந்தா ஒளி இன்றே ஓங்குக' என்று பாடு.

# அன்பே வழி

மற்ற உயிர்களுக்கில்லாத சில சிறப்பியல்புகள் மனிதனுக்குண்டு. அந்தச் சிறப்பியல்புகளால் அவன் ஓங்கியிருக்கிறானா அல்லது தனது அழிவுக்கே வழி தேடிக் கொண்டிருக்கிறானா என்று ஆராய்கின்றபோது நேர் மாறான கருத்துக்கள் இன்று நம்மை வந்து மோதுகின்றன.

மனிதனுக்கு அறிவிருக்கிறது; பிறருடைய அனுபவங்களை நேரிற் கண்டும், நூல்களின் மூலம் ஆராய்ந்தும் தீமையை விலக்கி நன்மையை நாட்டக்கூடிய வல்லமை இருக்கிறது. சுருங்கச் சொன்னால் மனம் என்ற பெருங் கொடை இருக்கிறது. மனிதனுக்கு வாய்த்துள்ள மனத்தைப்போல அவ்வளவு பக்குவமும் நுட்பமும் வாய்ந்த மனம் வேறு உயிர்களுக்கில்லை.

மனத்தின் ஆற்றலால் மனிதன் எவ்வளவோ அற்புதங்களை உண்டுபண்ணியிருக்கிறான். ஆனால் அவன் உண்டுபண்ண வேண்டியவை இன்னும் பல உண்டு. விஞ்ஞானத்துறையிலும், இயற்கையை வெல்வதிலும் அவன் மேலும் செய்யவேண்டியவற்றைப்பற்றி நான் இப்பொழுது கூற முற்படவில்லை. எத்தனையோ முயற்சிகளில் மனித இனம் பெரியதோர் ஆர்வம் காட்டுகிறது. ஆனால் உள்ளத்தின் இழிந்த உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்துவதிலும் அவற்றை மடைமாற்றி இன்பத்திற்கு வழி கோலுவதிலும் அவ்வளவு பெரிய ஆர்வம் காணப் படவில்லை.

மனம் படைத்த மனிதன் தனிச்சிறப்புப் பெற்றிருந்தாலும், அந்த மனத்திலே பதுங்கிக் கிடக்கும் விலங்குணர்ச்சிகளை அவன் அடக்கி ஆள முடியாவிட்டால் அவனுடைய விஞ்ஞான முன்னேற்றமெல்லாம் பயனற்றதாகிவிடும்.

பாரதக் கதையை வியாசர் எழுதிய அந்நாளிலேயே ஓருண்மை மனிதனுக்குத் தெரிந்துவிட்டது. போரால் தீமையைத் தவிர நன்மை யாருக்கும் ஏற்படுவதில்லை என்பதுதான் அந்த உண்மை. தோல்வியுற்றவனுக்கு மட்டும் போர் துன்பங் கொடுக்கவில்லை. வெற்றி பெற்றவனுக்கும் அது துன்பத்தையே தருகின்றது. பாரதப் போரில் மிகப் பெரிய வெற்றி பெற்ற பாண்டவர்கள் பின்னால் என்ன கண்டார்கள்? எங்கு பார்த்தாலும் அழுகைக் குரலே அவர்கள் காதில் ஒலித்தது. "போரில் மடிந்தவர்களின் துன்பம் முடிந்துவிட்டது; ஆனால் எங்கள் துன்பம் முடிவற்றதாக இருக்கிறது. போரில் இறந்தவர்களின் பிரிவாற்றுமையால் வருந்துகின்றவர்களின் துன்பத்தை எங்களால் தாங்க முடியவில்லை" என்று அவர்கள் கவலையுற்றதாக பாரதம் கூறுகிறது. அறத்தை நிலைநாட்ட எழுந்த போருக்குப் பிறகு எங்கு பார்த்தாலும் அறநெறிக்குமாறான செயல்கள் குறைபாடுகள் மிகப் பலவாக எழுந்தன ஆதலால் போரால் நன்மை என்பதே இல்லை என்கிற பேருண்மையை வியாசர் தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறார்.

இருந்தாலும் மனிதன் இதை நன்கு உணர்ந்து கொள்ளவில்லை. அவனுடைய விலங்குணர்ச்சி மங்கவில்லை. உலக வரலாற்றிலே என்ன காண்கிறோம்? போரில்லாத ஒரு நூற்றாண்டு எங்காவது உண்டா? பிறருடைய அனுபவங்களால் பயனடையக் கூடிய வல்லமை மனிதனுக்குத்தான் உண்டு என்று பெருமையோடு பேசு

கிறேம். ஒரு நாயின் அனுபவம் அந்த நாய்க்குமட்டுமே பயன்படலாம். ஆனல் அதனுடைய அனுபவத்தைக் கொண்டு மற்றொரு நாய் பயனடைய முடியாது. இந்த வல்லமை மனித இனத்திற்குத்தான் உண்டு என்று கூறிக் கொள்வதில் நாம் சிறிதும் தயங்குவதில்லை. ஆனல் உண்மையிலே பிறர் அனுபவத்தைக் கொண்டு நாம் பயனடைந்திருக்கிறேமா? சிறு முயற்சிகளிலே பய னடைந்திருக்கலாம். ஆனல் போர் என்ற வெறியை ஒடுக்குவதிலும் மனத்தின் இழிந்த உணர்ச்சிகளை அடக்கு வதிலும் நாம் பயனடைந்திருக்கிறேமா? உலக வரலாறு இதற்குச் சான்று கூறவே இல்லை.

பழங்காலத்துப் போர்களை விட்டுவிடுவோம். நாக ரிகத்திலும், விஞ்ஞானத்திலும் மிகவும் முன்னேற்ற மடைந்துள்ள இந்த இருபதாம் நூற்றண்டிலே முதல் உலகப் போர் நச்சுப்புகையோடு தனது கொடிய அழிவுக் கூத்தை ஆடிக் காண்பித்து முடிந்து ஒரு இருபத்தைந்து ஆண்டுகள்கூட ஆகவில்லை. அதற்குள்ளேயே மற்றொரு குலை நடுங்கும் உலகப் போர் மூண்டுவிட்டது. நச்சுப் புகையையும் விஞ்சியதான அணுப்புகையிலே அந்தப் போர் வெறிக்காட்சி தந்தது.

மனிதன் தன்னைப் பற்றிப் பெருமைகொள்ள முடி யுமா என்று கேட்கிறேன். அவனுடைய விலங்குணர்ச்சி கள் மாறுமுன்பு பெருமைப்பட அவனுக்குத் தகுதியே கிடையாது. இன்று மனிதனுக்குக் கிடைத்திருக்கும் அழிவுப் படைகளைப் பார்க்கும்போது மற்றொரு பெரும் போர் தொடங்குமானல் மனித இனமே பூண்டோடு அழிந்து போகும். என்று சிறந்த சிந்தனையாளர்களும் அஞ்சும்படியாக உள்ளது. இந்த நிலையிலேதான் மனிதன் அமைதியாக எண்ணிப் பார்க்கவேண்டும்.

காந்தியடிகள் நமக்குத் தகுந்த வேளையில் எச்சரிக்கை செய்ய வந்து தோன்றினார். நாட்டின் விடுதலைக்காக அவர் அரும்பாடுபட்டார். மிகப் பெரிய தியாகங்களைச் செய்தார். ஆனால் ஹிம்சையாலும், போராலும் விடுதலை வேண்டாம் என்றும் அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டார்.

அவருடைய வழி ஒன்றே இன்றைய உலகத்திற்கு ஏற்றது. அவருடைய வழி புதியதல்ல; ஆனால் அவர் அவ்வழியை அரசியலிலே புகுத்தியது ஒரு புதுமை; புரட்சியான புதுமை. உலகமே வியக்கும்படியான புதுமை. எல்லா வாழ்க்கைத் துறைகளுக்கும், செயல்களுக்கும் ஏற்ற வழி அது என்று அவர் மெய்ப்பித்துக் காட்டினார்.

அன்பு, அஹிம்சை, சத்தியம் என்ற அடிப்படையிலே இயங்கினால்தான் இனி உலகம் உய்ய முடியும். இல்லாவிட்டால் மனித இனமே அழிந்து போய் விடும். "மற்றொரு உலகப்போர் வருமானால் மலைகளிலும் காடுகளிலும் வாழும் பழங்குடி மக்களைத் தவிர மற்ற மக்கள் அனைவரும் இறந்துபடுவார்கள்" என்று பேரறிஞர் ஐன்ஸ்டைன் கூறியுள்ளதை மறந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு மனிதன் தன் உள்ளத்தினுள்ளே மறைந்து கிடக்கும் அரக்க உணர்ச்சிகளை மாற்றக் கற்றுக்கொள்ளவேண்டும். அதற்குக் காந்தியடிகளின் வழியே சிறந்ததாகும். அடிகள் பாரத நாட்டின் அடிமைத்தளையை அறுக்க மட்டும் தோன்றியவரல்ல என்று மீண்டும் கூறுகின்றேன். உற்ற வேளையில் உலகத்திற்கு ஏற்ற வழியை எடுத்துக்காட்டவே அவர் வந்தார். அவர் வழியைப் பின்பற்றி மனித இனம் ஓங்க வேண்டும்.

★

# பெ. தூரன் இயற்றிய நூல்கள்

### கவிதை

- இளந் தமிழா
- மின்னல் பூ
- நிலாப் பிஞ்சு
- பட்டிப் பறவைகள்

### சிறு கதை

- பிள்ளை வரம்
- உரிமைப் பெண்
- காளிங்கராயன் கொடை
- தங்கச் சங்கிலி
- மா விளக்கு

### ட்டுரை

- பூவின் சிரிப்பு
- காட்டு வழிதனிலே
- தேன் சிட்டு

### நாடகம்

- மனக் குகை
- ஆதி அத்தி
- அழகு மயக்கம்
- பொன்னியின் தியாகம்
- காதலும் கடமையும்
- சூழ்ச்சி
- இளந்துறவி

### உளவியல்

- மனமெனும் மாயக் குரங்கு
- குமரப் பருவம்
- அடி மனம்
- தாழ்வு மனப்பான்மை
- குழந்தை உள்ளம்
- பாரம்பரியம்

### சிறுவர் இலக்கியம்

- நிலாப் பாட்டி
- ஆனையும் பூனையும்
- ஜிம்மி
- பறக்கும் மனிதன்
- ஓலைக் கிளி

### பிற நூல்கள்

- கருவில் வளரும் குழந்தை
- பாரதி தமிழ்
- காற்றில் வந்த கவிதை

Jacket Printed at Neo Art Press, Madras - 2